Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 8.00




நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 | திருவள்ளுவர் ஆண்டு: 2036 | புரட்டாதி- 02 | ஹிஜ்ரி 1428 | சஃபான் 13 | (18.09.2005) | ஞாயிற்றுக்கிழமை | இதழ்:353

# சர்வதேச சமூகத்தை மீண்டும் ஏமாற்ற சமஷ்டி நாடகமாடுகின்றார் சந்திரிகா!

## நியூயோர்க் உரைகுறித்து தமிழ்ச்செல்வன் விசனம்



கிளிநொச்சி —

இனப்பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வே ஒரேவழியென்று நியூயோர்க்கில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருப்பது சர்வதேச சமூகத்தை மீண்டும் ஏமாற்றுவதற்கான நாடகமே!

சந்திரிகாவின் இத்தகைய உரைகளைத் தமிழ்மக்கள் நம்பியதாக வரலாறு இல்லை என்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நியூயோர்க்கில் ஆசிய சமூகத்தில் நிகழ்த்திய உரையில் - ஜனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி ஆட்சிமுறையே ஒரே வழியெனத் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டபோதே அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி சந்திரிகா (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ கடற்படைத் துணைப்படை; மூன்றாவது அணி பயிற்சி நிறைவு!

வவுனியா —

லெப். கேணல் மறவன் பயிற்சிப் பாசறையில் தமிழீழ கடற்படையின் துணைப்படை மூன்றாம் அணியின் பயிற்சிகள் நேற்று நிறைவடைந்தன. நிறைவு நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை பொதுச் சுடரை ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை முதன்மைப் பயிற்சி ஆசிரியர் பூவண்ணன் இறக்கி பயிற்சி நிறைவை அறிவித்தார். இந்த நிகழ்வில் கேணல் சூசை சிறப்புரை நிகழ்த்தினார். தமிழீழ கடற்படைத் தளபதிகள் கலார்த்தன், விநாயகம், கடற்புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணி, திலீபன் மருத்துவமனைப் போராளி இசைநிலா, பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தொடர் தேடுதல்; 7 தமிழ் இளைஞர்கள் கைது!

கொழும்பு —

கொழும்பு நகரில் முப்படையினரும் பொலிஸாரும் நடத்திவரும் தேடுதல்கள் மற்றும் சுற்றிவளைப்புக்களில் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் மாலையும் இரவும் படையினர் நடத்திய சோதனைகள் மற்றும் தேடுதல்களின்போது ஏழு (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள், எம்.பிக்கள் வெளிநாடு செல்லத் தடை!

கொழும்பு —

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதற்கு மறுஅறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது. உடனடியாக இந்தத் தடை அமுலுக்கு வந்திருப்பதாகவும் மறு அறிவித்தல் வரை இந்தத் தடை நடைமுறையில் இருக்குமெனவும் அறிவிப்பை சுதந்திரக்கட்சியின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமது வாழ்வுரிமையைக் காக்கவே ஈழத் தமிழர்கள் போராடுகின்றனர்!

### ராஜீவ் கொலை விசாரணை அதிகாரி கார்த்திகேயன்



சென்னை —

இலங்கையில் தமிழர்கள் தமது உரிமைக்காக ஜனநாயக ரீதியில் எழுப்பிய குரல், ஆட்சியாளர்களின் காதுகளில் எடுபடாத நிலையில்தான் - அடுத்த தலைமுறையினர் அயுதங்களைக் கையில் எடுத்து தமது வாழ்வுரிமையை காத்துக்கொள்ள போராடுகின்றனர். இதற்கு தீர்வு கண்டால்தான் அங்கு அமைதி திரும்பும் என -

ராஜீவ்காந்தி கொலை வழக்கை விசாரித்த இந்தியப் புலனாய்வுத்துறையின் விசேட குழுவுக்குத் தலைமை வகித்த டி.ஆர்.கார்த்திகேயன் தெரிவித்தார்.

இந்தியாவின் மத்திய புலனாய்வுத்துறை(சி.பி.ஐ)யில் இருந்து ஓய்வு பெற்றிருக்கும் டி.ஆர்.கார்த்திகேயன், ராஜீவ் கொலை விசாரணை தொடர்பாக ஆங்கிலத்தில் எழுதிய புத்தகம் 'வாய்மையின் வெற்றி' என்ற பெயரில் தமிழில் வெளிவரவுள்ளது.

இது தொடர்பாக சென்னையில் இருந்து வெளியாகும் 'ஜூனியர் விகடன்' இதழுக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

### - பொங்கு தமிழ் நிகழ்வுக்கு -

## மக்களை அணி திரட்டுவதற்காக பிரதேசரீதியில் கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம் —

தற்போது நடைமுறையிலுள்ள தமிழீழ அரசாங்கத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரி இம்மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கு மக்களை அணி திரட்டும் பணியில் யாழ். பல்கலைக்கழக சமூகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

பிரதேச ரீதியாக மாதர் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை உள்ளிட்ட அனைத்துப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைப் பல்கலைக்கழக சமூகத்தினரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்தித்துக் கலந்துரையாடி வரு கின்றனர்.

கோப்பாய்ப் பிரதேச மக்களை அணி திரட்டுவதற்கான ஆலோசனைக் கூட்டம் நேற்று கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடை பெற்றது.

கோப்பாய் தேசிய எழுச்சிப் பேரவையின் தலைவர் சிவகடாச்சம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -

கோப்பாய் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சதாசிவ ஐயர், கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் புதிய அரசாங்கம் சமாதான முயற்சியை தொடரும்!

### பிரதமர் பொன்டவிக் உறுதிமொழி



நியூயோர்க் —

நோர்வேயில் புதிதாகப் பதவியேற்கவுள்ள அரசாங்கம் - இலங்கை சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் அனுசரணையாளராக பணியாற்றும் என நோர்வே பிரதமர் கஜெல் மக்னே பொன்டவிக் - ஜனாதிபதி சந்திரிகாவிடம் உறுதியளித்தார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ.நா.கூட்டத் தொடரில் கலந்து கொண்டபோதே - ஐ.நா.தலைமையகத்தில் ஜனாதிபதி சந்திரிகாவும் நோர்வே பிரதமர் பொன்டவிக்கும் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், ஆகியோரும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க, வெளிவிவகார அமைச்சு செயலாளர் எச்.எம்.ஜி.எஸ்.பாலிக்கார, சமாதான செயலக பணிப் பாளர் ஜயந்த தனபால, ஐ.நா.நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பிரசாத் காரியவசம் ஆகியோரும் பங்கேற்றனர்.

தற்போதைய நோர்வே (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கடல் நீர் நிலப் பகுதிக்குள் புகுந்தது!

### 'சுனாமி' என மக்கள் ஓட்டம்

திருகோணமலை —

திருகோணமலையில் நேற்று மாலை 5 மணியளவில் கடல்நீர் நிலப்பரப்புக்குள் உட்புகுந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. உப்புவெளி, ஜமாலியா, சிறிமாபுரம், சல்லி ஆகிய இடங்களிலேயே கடல் நீர் உட்புகுந்தது. இதையடுத்து சுனாமி ஏற்பட்டுள்ளதென பரவிய வதந்தி காரணமாக மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது. மக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

APC
ஆனந்தா பிறைவேற் கிளினிக்
(M.B.B.S) எம்.பி.பி.எஸ். வைத்தியர்களினால் சகல மருத்துவ சேவைகளும் ஆய்வுகூட சேவைகளும் வழங்கப்படுகின்றன.
(C/4385)
173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 8144
ஆலோசனை நேரம்:
(திங்கள் - சனி) காலை 6.00- இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 - காலை 10.00
மாலை 5.00 - இரவு 9.00


# இல்ல மெய்வல்லுநர் போட்டி

அரியாலை—

அரியாலை சனசமூக நிலையத்தின் 56ஆவது ஆண்டு நிறைவையொட்டி சனசமூக நிலையம் நடத்தும் இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சங்க உத்தியோகத்தர் கு.இரவீந்திரகுமார் பிரதம விருந்தினராகவும், கிராம அலுவலர் இ.சண்முகநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

அன்றைய தினம் இரவு 7.30 மணிக்கு கலை நிகழ்வுகள் அனைத்தும் சனசமூக நிலையத்தின் காசிப்பிள்ளை அரங்கில் ஆரம்பமாகும்.

இந்த நிகழ்வில் சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவர் எஸ்.ரி. கணநாதன் பிரதமவிருந்தினராகவும், ஆசிரியர் அ.உபயசேகரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## அவசர கலந்துரையாடல்!

ஊர்காவற்துறை—

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட அனைத்து கழகங்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தெரிவித்துள்ளார்.

## சேவைநலன் பாராட்டு விழா

சங்கானை—

சங்கானை கல்விக் கோட்ட அதிபர் சங்கம் நடத்தும் ஓய்வு பெற்ற அதிபர்களின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று முற்பகல் 11 மணிக்கு சித்தங்கேணி ஸ்ரீ கணேசாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அதிபர் இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - ஓய்வுபெற்றவர்களான மூளாய் சைவப்பிரகாசவித்தியாலய அதிபர் திருமதி ர.சோதிலிங்கம், பண்ணாகம் வடக்கு அ.மி.த.க.பாடசாலை அதிபர் க.இரத்தினேஸ்வரன் மற்றும் காட்டுப்புலம் அ.மி.த.க பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள நா. தனபாலசிங்கம் ஆகியோரே பாராட்டி கௌரவிக்கப் படவுள்ளனர். (48)

# சுய நிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கு மக்கள் அணிதிரளும் காலம் வந்துவிட்டது

## – தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் –

யாழ்ப்பாணம்—

பேச்சுவார்த்தை மூலம் எமது உரிமையைப் பெற்றுக் கொள்ள முடியும் என இனிமேலும் எம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்காது, சுயநிர்ணய உரிமையை நிறுவுவதற்காக நாம் அனைவரும் அணிதிரளும் காலம் நெருங்கிவிட்டது என -

தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிங்கள தேசம் தமிழ் மக்களின் உரிமைகள் எதனையும் வழங்கத் தயாராக இல்லை என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறது. தந்தை செல்வநாயகம் போன்ற மிதவாதத் தலைவர்களுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் தொடக்கம் இன்றைய இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை, பொதுக் கட்டமைப்பு வரையிலான நிராகரிப்புக்கள் சமாதான வழிகளில், பேச்சுவார்த்தை மூலம் எதையும் வழங்குவதற்குத் தாம் தயாராக இல்லை என்பதை சிங்கள தேசம் தெளிவாகவே சொல்லி விட்டது. எரிந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினையை விட ஜனாதிபதித் தேர்தலே சிங்களத் தலைமைகளுக்கு முக்கியமாகி விட்டது.

அகதி வாழ்வு வாழ்ந்து அல்லற்படும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, எம்மக்களைத் தொடர்ந்து அடிமைகளாக்குவதற்கான சாசனங்கள் வரைவதில் சிங்களக் கட்சிகள் கூட்டுச் சேர்கின்றன.

இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவித்து பேச்சுவார்த்தைகள் மூலம் படிப்படியாக நிரந்தரத் தீர்வை நோக்கி நகர்வதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசினாலும், இராணுவத்தாலும் சிதைக்கப்பட்டு வருகிறது. மூன்றரை ஆண்டுகள் கடந்து விட்ட போதும், தமிழ் மக்களின் வாழ்வில் எந்தவித விடிவும் ஏற்படவில்லை.

சமாதான காலத்தில் போராளிகளும், பொதுமக்களும் கொல்லப்படுகிறார்கள். தமிழ் மக்களின் போராட்டப் பலத்தை நசுக்குவதற்கான நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில் தொடர்ந்து சமாதானம், பேச்சுவார்த்தை எனக் கூறிக் கொண்டு எம்மை நாமே ஏமாற்றக் கூடாது. நாம் எமது இறைமையையும், சுயநிர்ணய உரிமையையும் நிலைநிறுத்துவதற்காக நாம் அனைவரும் ஒன்று திரள வேண்டிய காலம் வந்துவிட்டது.

எமது இலட்சியத்தை அடையும் காலம் கனிந்துவருகிறது. எமது மண்ணில் நிறுவப்பட்டுள்ள நடைமுறை அரசை அங்கீகரிக்கும்படி சர்வதேசத்தை வலியுறுத்துவதன் மூலமே எங்கள் இலட்சியத்தை அடைய முடியும். இதுவே உயர்ந்த இலட்சியத்துக்காக ஆகுதியான மாவீரர்களதும், மக்களதும் தியாகங்களுக்கு நாம் செய்யும் கைம்மாறாகும்.

இந்த வரலாற்றுக் கடமையைச் செய்வதற்காக எதிர்வரும் 30 ஆம் திகதி ஒன்றுதிரளுமாறு தென்மராட்சியிலுள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், வர்த்தகர்கள், கூட்டுறவாளர்கள், தொழிலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆண்டு விழாவும் பரிசளிப்பும்

பன்னாலை—

பன்னாலை சேர். கனகசபை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் 150ஆவ்து ஆண்டு நிறைவு விழாவும், நூல் வெளியீடும், பரிசளிப்பு வைபவமும் இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் பிரதமவிருந்தினராகவும், வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூலின் ஆய்வுரையை சைவப் புலவர் சு.செல்லத்துரை நிகழ்த்துவார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (72)

## கலைப்பீட மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்—

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட முதலாம், மூன்றாம் வருட மாணவர்களின் விரிவுரைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அன்றைய தினம் அனைத்து கலைப்பீட மாணவருக்குமான அவசர கலந்துரையாடல் முற்பகல் 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து கலைப்பீட மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எஸ். புருசோத்தமன் தெரிவித்துள்ளார்.


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் - கச்சேரி, பாடசாலைகள், கோவில்கள் மத்தியில், இராசாவின் தோட்டம் வீதியில் 2 1/2 பரப்புக் காணியில் உடன் குடியிருக்கக்கூடிய வீடு விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. T.P.0776220051. (2058)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

மருதனார்மடம் - மானிப்பாய் வீதியில் உடுவில் மகளிர் கல்லூரிக்குச் சமீபமாக பிள்ளையார் கோயிலடியில் கிணற்றுடன் சேர்த்து 3 அறைகள் கொண்ட சிறிய வீட்டுடன் சற்சதுரமான 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை) தொடர்பு:- 021-4591072, 0777291833. (2063)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

சத்தியராஜ், சிபிராஜ், சுவா, வடிவேல் நடித்த

**மண்ணின் மைந்தன்**

காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

**மனோகரா** யாழ்ப்பாணம்

(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)

சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த

**தொட்டி ஜெயா**

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

**நிரஞ்சனாஸ்** சங்கானை

ஜெயம் புகழ் ரவி, ரேணுகா மேனன் நடித்த

**தாஸ்**

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்

2ஆவது ஜனத்திரள் வாரம்

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு - நியூ புகழ் - எஸ்.ஜே.சூர்யா, நிலா



**அன்பே ஆருயிரே**

இசை - A.R. ரகுமான்

ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்

ரவிகிருஷ்ணா, கோபிகா, பிரகாஷ்ராஜ், ரேவதி மற்றும் பலர் நடித்த

**பொன்னியின் செல்வன்**

காட்சிகள்:- 11.00, 3.00, 7.00, 10.00 (பழைய நேரம்)

**டிஜிற்றல் போட்டோ கொப்பி**

$A_4$ - கறுப்பு வெள்ளை - 3.00 ரூபா

$A_4$ - கலர் - 40.00 ரூபா

**மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்**

62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/4609)

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல காப்புறுதி நிறுவனம் தனது சேவையை விரிவுபடுத்தும் முகமாக பிரதேச பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்

கல்வித் தகைமை :- G.C.E.(O/L)

வயது எல்லை :- 18 - 65

சம்பளம் :- 5000 - 50,000/= (தரகுப் பணம்)

விண்ணப்பங்கள் கிடைக்கவேண்டிய கடைசித் திகதி 23.09.2005

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி –

விளம்பர இல.44,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(2061)


# ஓராண்டு நினைவலைகள்

மலர்வு: 30 - 12 - 1949

உதிர்வு: 29 - 09 - 2004



அன்பாக எமையெல்லாம் ஆதரித்த தெய்வமே!
ஆண்டு ஒன்று கடந்து விட்டது! அப்பா! அப்பா!
என்று ஆற்றும் எங்கள் இதயம் ஆறவில்லை.
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
ஆலமரமாய் நீங்கள் இருந்தீர்கள்
அதன் விழுதுகளாய் நாம் இருந்தோம்.
ஆலமரமும் சாய்ந்தது; ஆனந்தமும் பறிபோனது.
தீராத வேதனையால் தினம் தினம் துடிக்கின்றோம்
வீண்பொழுது போக்கி நீங்கள் வீணனாய் அலையாமல்
விருப்புடனே நற்பணிகள் செய்துமே வந்தீர்கள்.
ஊன் உறக்கம் இல்லாது ஊருக்காய் உழைத்து
உத்தமனாய் விளங்கி சேன வயதில் உயர்ந்தாய்.
ஊர் பெயரை உன்னோடு சேர்த்துக்கொண்டு
உனை நாடி வந்தோர் யாரையும்
புன்சிரிப்பால் அன்புடனும் பண்புடனும் வரவேற்று
தேடி வந்தோர் யாரையும் நீ சினக்கவில்லை
முந்தையர் மண்ணுன்னை முழுமூச்சாய் தேடுதையா
ஏன் எமைவிட்டகன்று எட்டாத இடம் சென்றாய்?
ஏந்தலே உன்னினைவை எப்படி மறப்போம்?
ஆத்ம சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

அமரர்

**பிச்சாண்டி தம்பு திருநாவுக்கரசு**

(ஓய்வுபெற்ற பணிநிலை உத்தியோகத்தர், மக்கள் வங்கி)

திதி:- 18-09-2005

**குடும்பத்தினர்.**

இல.37, மண்பிட்டி வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

(2064)

# பொதுக்கட்டமைப்பு குறித்த நிலைப்பாட்டை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மாற்றியது ஏன்?

## விளக்கமளிக்கக் கோருகிறது ஐ.தே.க.

கொழும்பு—

பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டு நகலை நாடாளுமன்றில் சமர்ப்பித்து, அதை ஆதரித்துப் பேசிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ - இப்போது அதைக் கைவிடவேண்டுமென்று தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது ஏனென்று பொது மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டுமென ஐ.தே.க. கோரியுள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஐ.தே. கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் - நாடாளுமன்றில் பொதுக்கட்டமைப்பை ஆதரித்துப் பேசி, அதை நடைமுறைப்படுத்தவேண்டுமென்று கூறிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ - இப்போது ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமயவினருடன் இணைந்து பொதுக் கட்டமைப்பைக் கைவிடும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

தனது இந்த நிலைப்பாட்டு மாற்றங்களுக்குக் காரணம் என்ன என்பதை மக்களுக்கு மஹிந்த ராஜபக்ஷ விளக்கவேண்டும்.

2004 ஆம் ஆண்டு தேர்தலின்போது மக்களின் வாழ்க்கைச் செலவீனங்கள் குறைப்பு, விவசாயிகளுக்கு உத்தரவாதங்கள் என்றெல்லாம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. ஆனால், நடந்தது என்ன? வாழ்க்கைச் செலவீனங்கள் அதிகரித்துவிட்டன. விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யமுடியாத நிலை தோன்றியுள்ளது.

இப்போது தேசத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கும் நிலையில், யுத்த நெருக்கடியும் உருவாகியுள்ளது.

ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றுடனான மஹிந்த ராஜபக்ஷவின் ஒப்பந்தம் இந்த நாட்டின் பொருளாதார, பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல்களை உருவாக்கியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தப்போவதாக மஹிந்த ராஜபக்ஷ கூறிவருகிறார். பிரபாகரனுடன் என்ன அடிப்படையில் பேச்சுக்களை நடத்தப்போகிறார் என்பதை மஹிந்த விளக்க வேண்டும்.

இந்த விடயத்தில் எமது கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெளிவான நிலைப்பாட்டில் உள்ளார். பிளவுபடும் நிலையிலுள்ள நாட்டை இணைப்பதென்பதில் அவர் உறுதியாக இருக்கிறார் என பீரிஸ் தெரிவித்தார்.

இங்கு ஐ.தே.கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்து வெளியிடுகையில் -

மஹிந்த ராஜபக்ஷ செல்லும் பாதையானது - யுத்தத்துக்கு வழிவகுக்கும் பாதையாகும். அன்று மணிராசகுளம் முகாம் தொடர்பாக நாட்டின் பாதுகாப்புக் குறித்தும், யுத்தநிறுத்த ஒப்பந்தம் குறித்தும் கண்ணீர் வடித்தவர்கள் எல்லாம் இன்று அந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

ஜே.வி.பியுடனான ஒப்பந்தத்தில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்போம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஹெல உறுமயவுடனான ஒப்பந்தத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையைத் தொடர்ந்து செயற் படுத்துவோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இரண்டு ஒப்பந்தங்களுமே ஒன்றுக்கொன்று முரணானவையென திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு நகரில் பொலிஸார் தேடுதல்!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு ஊறணி, இருதயபுரம் ஆகிய பகுதிகளில் பொலிஸார் நேற்று முன்தினம் சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தப் பகுதிகளில் பொலிஸார் வீடு வீடாகச் சென்று தேடுதல் மேற்கொண்டதாகவும், வீடுகளில் குடியிருப்போரின் விபரங்களைத் திரட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்பின்னர், சோதனையிடப்பட்ட வீடுகள் இலக்கமிடப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மஹிந்த செய்த உடன்பாடுகள் அனுரா ஆராயவுள்ளாராம்!

கொழும்பு—

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் சில கட்சிகள் மற்றும் அமைப்புகளுடன் ஏற்படுத்திய ஒப்பந்தங்கள் தொடர்பாகப் பூரணமாக ஆராய்ந்து பார்க்கவுள்ளதாக, வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஜனாதிபதியுடன் உத்தியோகபூர்வமாகக் கலந்துரையாடிய பின்னர், இந்த ஒப்பந்தங்கள் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்துமாறு ஆலோசனை தெரிவிக்கவுள்ளேன்.

இதன்படி, இந்த ஒப்பந்தங்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகளுக்கு அமைய இருந்தால், பிரதமரின் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்கு எனது ஆதரவு கிடைக்கும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு அதரவு வழங்கப் போவதில்லையென முன்னர் நான் ஒரு போதும் கூறவில்லை எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தலில் வெற்றியை தீர்மானிக்கும் சக்திகளாக புலிகளும் உள்ளனர்

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியைத் தீர்மானிக்கு சக்திகளாக- தமிழீழ விடுதலைப்புலிகள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பன இருக்கின்றன. இந்தக் கட்சிகளின் வாக்குகளே அடுத்த ஜனாதிபதியைத் தீர்மானிக்கவுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மறைந்த எம்.எச்.எம்.அஷ்ரப்பின் 5ஆவது நினைவு தினமும், கத்தமுல் குர் ஆன் நிகழ்வும், நேற்று முன்தினம் மாலை திருமலை சாகிரா கல்லூரியில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய ரவூப் ஹக்கிம் -

பிரதான கட்சிகளின் வேட்பாளர்களின் அணுகுமுறை எவ்வாறு இருக்கிறது என்பதைப் பொறுத்தே முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு அமையவுள்ளதாக தெரிவித்தார். பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டதற்கு காரணம் முஸ்லிம்கள் மத்தியில் ஒற்றுமை இல்லாதது என்பது அல்ல எனத் தெரிவித்த அவர், இதில் தம்மத்தியில் கருத்து ஒருமைப்பாடு இருந்தது ஆயினும், திட்டமிட்டு தாம் புறக்கணிக்கப்பட்டதாக குற்றம்சாட்டியுள்ளார். அதற்குக் காரணம் ஆட்சியிலிருக்கும் அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் எம்மை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதேயாகும். இந்தநிலையில் எவர் முஸ்லிம் தனித்துவ அரசியலை பலவீனப் படுத்த முயலமாட்டாரோ, அதனைப் பொறுத்து தாம் ஆதரவு இருக்கும்.

மஹிந்த ராஜபக்ஷவின் பலமும், பலவீனமும்- ஜே.வி.பியுடனும் ஜாதிகஹெல உறுமயவுடனும் கூட்டுச் சேர்ந்திருப்பதே எனவும் -ரணில் விக்கிரமசிங்கவின் பலமும், பலவீனமும் விடுதலைப்புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையே எனவும் சுட்டிக் காட்டியுள்ள அவர்-

தமிழ்மக்களுடன்உறவைப் பேணி, சுயாட்சியை அடைவதே முஸ்லிம் காங்கிரசின் நோக்கமாக அமையும் நிலையில், ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் இந்த நாட்டை எங்கு கொண்டு போகப்போகின்றதோ தெரியவில்லையெனவும் விசனம் தெரிவித்தார். (01),(04)

# திருமலை புத்தர் சிலைக்கான பாதுகாப்புகள் குறைப்பு!

கொழும்பு—

திருகோணமலையில் நிர்மாணிக்கப்பட்ட புத்தர் சிலைக்கான இராணுவப் பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளது.

திருமலை பஸ் நிலையத்தில் திடீரென உருவாக்கப்பட்ட இந்தச் சிலையைப் பாதுகாக்க நான்கு காவலரண்கள் அமைக்கப்பட்டு, இராணுவத்தினர் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

அப்போதைய திருகோணமலை பாதுகாப்புப் படைத்தளபதி சரத் வீரசேகர இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

இந்தக் காவலரண்கள் அகற்றப்பட்டு வருகின்றன என்றும், விரைவில் அனைத்துப் படையினரும் விலக்கிக் கொள்ளப்படுவார்கள் என்றும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேபோல கொகனன ராஜமகா விகாரையைச் சுற்றிய காவலரணும் அங்கிருந்து அகற்றப்பட்டு, வேறு இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தினரின் இந்த நடவடிக்கைகளுக்கு உள்ளூர் சிங்கள பிக்குகள் அமைப்பினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

திடீர் புத்தர் சிலை ஏதேனும் நேர்ந்தால் இனக்கலவரம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

# பொலிஸார் கைது செய்யப்பட்டமைக்கு அரசாங்கம் கடும் கண்டனம்!

கொழும்பு—

தமிழீழ விடுதலைப் புலிகளால் மூன்று பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளதற்கு, அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்துக் கொழும்பு ஊடகவியலாளர்களுக்கு - அரச பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகளின் கைது நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறோம். விடுதலைப் புலிகளின் பிரதேசத்துக்குள் சென்ற பொலிஸார் - உளவு பார்க்கச் செல்லவில்லை. குற்றவாளியைக் கைது செய்யவே அங்கு சென்றனர். அவர்களைச் சிறைக்கைதிகளாக விடுதலைப் புலிகள் வைத்திருப்பதற்குக் காரணமே இல்லை.

இது தவறான நடவடிக்கை என்று, போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். இது விடயத்தில் சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் பெறத் திட்டமிட்டுள்ளோம். விடுதலைப் புலிகளின் விளக்கமறியலிலுள்ள மூன்று பொலிஸாரும் நல்ல உடல் நிலையுடனேயே இருப்பதாகக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

இதேவேளை - ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகச் சுதந்திரக் கட்சிக்குள் வேறுபாடு உள்ளது உண்மையே. இது தொடர்பாக சந்திரிகா குமாரதுங்கவும், மஹிந்த ராஜ பக்ஷவும் பேச்சு வார்த்தை நடத்துவார்கள். இருப்பினும், மஹிந்த ராஜபக்ஷவையே சந்திரிகா குமாரதுங்கா ஆதரிப்பார். அதில் எவ்வித மாற்றமுல்லை.

ஒற்றையாட்சி முறையை மஹிந்தவும், கூட்டாட்சியைச் சந்திரிகாவும் வலியுறுத்தி வருவது தொடர்பாக நான் கருத்து எதுவும் தெரிவிக்கமுடியாது.

அமைதிப் பேச்சுக்களை மீண்டும் முன்னெடுக்க, நோர்வே விசேட தூதர் ட்றோண்ட் புறூவ் ஹொவ்டேயும், வெளிவிவகார அமைச்சரும் விரைவில் இலங்கை வரவுள்ளார் எனினும், அவரது பயணத் திகதி அறிவிக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பகிரங்க விவாதத்துக்கு தயாராம்!

## -ரணில் தெரிவிப்பு-



ஜனாதிபதி தேர்தல் தொடர்பான பகிரங்க தொலைக்காட்சி விவாதம் ஒன்றுக்கு தாம் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இதற்கான அழைப்பை பல தொலைக்காட்சி நிறுவனங்கள் விடுத்திருந்ததாகவும் அவர் கூறினார்.

அமெரிக்கா போன்ற நாடுகளில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு இடையில், பகிரங்க விவாதங்கள் நடைபெறுவதோடு, அந்த விவாதம் அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பப்படும். முதலில் இதற்கான அழைப்பை விடுத்த நிறுவனத்திடம் தனது விருப்பத்தை ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். ஏனைய தொலைக்காட்சி நிறுவனங்களும் இது குறித்து தம்முடன் தொடர்பு கொள்ளமுடியும் என எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான விவாதம் ஒன்று நடைபெறுமாயின், இலங்கையில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையில் நடைபெறும் முதலாவது பகிரங்க விவாதம் இதுவாக இருக்கலாம்.

இவ்வாறான விவாதங்கள் மூலமே ஜனாதிபதி வேட்பாளர்களின் கொள்கைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை அறிந்து கொள்ள முடியும். ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க இந்த விவாதத்துக்கான தனது முழுமையான இணக்கத்தைத் தெரிவித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தற்காப்பு ஆயுதங்களைக் கோரும் அரச புலனாய்வு அதிகாரிகள்!

கொழும்பு—

தங்களது உயிருக்கு ஆபத்து இருப்பதால், பாதுகாப்புக்கான ஆயுதங்களை வழங்குமாறு புலனாய்வுத்துறை அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக இராணுவர் புலனாய்வுத்துறைத் தலைமையகத்துக்குப் பெரும் எண்ணிக்கையிலான புலனாய்வுத் துறையினர் கடிதம் அனுப்பியுள்ளனர்.

ஆனால், தற்காப்புக்கான ஆயுதம் கோரும் வகையில் உங்கள் உயிருக்கு எந்த வகையில் ஆபத்து இருக்கிறது என்று சான்றுகளை அளிக்குமாறு புலனாய்வுத்துறைத் தலைமையகம் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

இதனால் இராணுவப்புலனாய்வுத்துறைத் தலைமையுடன் சிறிலங்கா புலனாய்வுத்துறை அதிகாரிகள் முறுகல் நிலையில் இருப்பதாக இராணுவச் செய்திகள் தெரிவிக்கின்றன.



# கங்கூலி - சப்பல் முரண்பாடு; தலைதூக்கியது எவ்வாறு?

புலவாயோ—

இந்திய அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பல், கங்கூலிமீது அதிருப்தியாக இருப்பது வெட்ட வெளிச்சமாகி இருக்கிறது.

என்னை கப்டன் பதவியிலிருந்து விலகச் சொல்கிறார்கள் என்று கங்கூலி வெளிப்படையாகக் கூறியிருக்கிறார். கிரேக் சப்பல்தான் அவரை பதவி விலகச் சொன்னதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய அணிக்கு கிரேக் சப்பலைப் பயிற்சியாளராக நியமிக்க காரணமாக இருந்தவரே கங்கூலிதான். அப்போது கிரேக் சப்பலும், ரொம் மூடியும் பயிற்சியாளர் பதவியைப் பிடிக்க போட்டியில் இருந்தனர். பெரும்பாலான வீரர்கள் ரொம் மூடிக்கு ஆதரவாக இருந்தாலும், கங்கூலி கிரேக் சப்பலுக்கு ஆதரவாக இருந்தார். இதனால்தான், கிரேக் சப்பல் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

கிரேக் சப்பலுக்கும் கங்கூலிக்கும் ஏற்கனவே நல்ல பழக்கம் உண்டு. 2003ஆம் ஆண்டு கங்கூலி அவுஸ்ரேலியா சென்றிருந்தபோது, கிரேக் சப்பலை நேரில் சந்தித்து, துடுப்பாட்டம் குறித்து ஆலோசனை பெற்றார். இந்தப் பழக்கம்தான் அவருக்கு கங்கூலியின் ஆதரவைப் பெற்றுத் தந்தது.

ஆனால், இப்போது அவர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டிருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

பொதுவாக போட்டியின்போது, எந்த வீரரைக் களமிறக்குவது, எந்த வரிசையில் அனுப்புவது என்பதை பயிற்சியாளரும், கப்டனும்தான் பேசி முடிவு செய்வார்கள்.

ஆனால், ஆரம்பத்திலிருந்தே கிரேக் சப்பல் சொல்வதை கங்கூலி அலட்சியப்படுத்தி வந்துள்ளார். இலங்கை சுற்றுப்பயணத்தின்போது, கங்கூலி கப்டனாக இல்லாவிட்டாலும்கூட வீரர்களை அனுப்பும் விவகாரத்தில் ஆதிக்கம் செலுத்தியிருக்கிறார். காயமடைந்திருந்த நெஹ்ரா, இலங்கை போட்டிக்குத் தகுதி பெறவில்லையென்று சப்பல் கருதினார். ஆனால், நெஹ்ராவை கங்கூலிதான் சேர்க்க வைத்துள்ளார்.

இதனால், அப்போதே கிரேக் சப்பல், நெஹ்ராவை வெளிப்படையாக விமர்சித்திருக்கிறார். மேலும் இலங்கை போட்டியிலும் கங்கூலி சரியாக விளையாடவில்லை. இது சப்பலுக்கு அதிருப்தியை மேலும் ஏற்படுத்தியது.

சிம்பாப்வே சுற்றுப்பயணத்தில் கப்டன் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கங்கூலி, கிரேக் சப்பலின் ஆலோசனைகளைத் தொடர்ந்து அலட்சியப்படுத்தியுள்ளார்.

வேணுகோபால்ராவை முதல் ஒருநாள் போட்டியில் 3ஆவது வீரராக களமிறக்கினார். அதன்பின்பு தொடக்க வீரராகக் களமிறக்கினார். இரண்டிலுமே வேணுகோபால் பிரகாசிக்கவில்லை. கிரேக் சப்பலின் ஆலோசனையை மீறி வேணுகோபாலை கங்கூலிதான் இவ்வாறு களமிறக்கியிருக்கிறார்.


சிம்பாப்வே ஒருநாள் போட்டிகளில் மொகமட் கைவ்வும், யுவராஜ் சிங்கும் சிறப்பாக விளையாடினார்கள். ஆனால் அவர்கள் இருவரையும் டெஸ்ட் போட்டிகளில் வைத்துக்கொள்ள கிரேக் சப்பல் விரும்பினார். ஆனால் கங்கூலி சம்மதிக்கவில்லை. கைவ்வுக்குப் பதிலாக கௌதம் கம்பீரை களமிறக்க வைத்தார்.

அதுபோல சகீர்கானை டெஸ்ட் போட்டியிலும் தொடர வைக்க கிரேக் சப்பல் விரும்பியதற்கும் கங்கூலி எதிராகவே இருந்தார். வீரர்களை களத்துக்கு அனுப்புவது, களத்தடுப்பு முறை போன்றவற்றிலும் கிரேக் சப்பலின் ஆலோசனையை கங்கூலி ஏற்கவில்லை.

அத்துடன், சிம்பாப்வேயில் நடந்த ஒருநாள் போட்டிகளிலும் கங்கூலி ஏனோ, தானோ என்று விளையாடினார்.

இவையெல்லாம் சேர்த்து கிரேக் சப்பலுக்கு கங்கூலி மீது கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. இதன் விளைவுதான் கங்கூலியை பதவிவிலகும்படி வற்புறுத்த வைத்துள்ளது.

கங்கூலிக்கும், சப்பலுக்குமிடையேயான மோதலில் இருவரும் எந்தக் கருத்தையும் வெளியிடக்கூடாது என இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ரன்பீர் சிங் மகேந்திரா எச்சரிக்கை செய்துள்ளார்.




## உதைபந்தாட்ட இன்றைய போட்டிகள்

யாழ்ப்பாணம்—

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகத்தின் 14ஆம் ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் கழக மைதானத்தில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும்,

பிற்பகல் 4.30 மணிக்கு புனித தோமையர் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து எவரெஸ்ட் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

விளையாட்டு

# கிரிக்கெட் சூதாட்ட குற்றச்சாட்டு; முரளிதரன் முற்றாக நிராகரிப்பு!

கொழும்பு—

கிரிக்கெட் சூதாட்டத்தில் (ஆட்டநிர்ணயம்) இலங்கை சுழற்பந்து வீரர் முத்தையா முரளிதரனுக்கு தொடர்பு இருப்பதாகவும், மும்பை 'பார்'-டான்ஸ் அழகியை அவர் சந்தித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டை முரளிதரன் திட்ட வட்டமாக மறுத்தார்.

இது குறித்து கொழும்பில் இருந்து அவர் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை வெளியிட்டார்.

எனக்கு 'பார்'-அழகி யாருடனும் எவ்வித தொடர்பும் கிடையாது. கிரிக்கெட் சூதாட்டத்திலும் எனக்கு பங்கு இல்லை. இந்தக் குற்றச்சாட்டு என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. நான் சமீப காலத்தில் சில தடவை மும்பைக்கு போய் வந்திருக்கிறேன். விருது வாங்கும் விழாவுக்காகவும்,



என் குடும்ப வர்த்தக விடயங்களுக்காகவும் நான் மும்பை சென்றிருக்கிறேன்.

ஒரு தடவை நடிகர் ஆதித்யா பஞ்சோலி என்பவர் என்னை விருந்துக்கு அழைத்ததால், அந்த விருந்துக்கு சென்றிருந்தேன். தீபா 'பார்' விடுதிக்கும் போனோம். 1 மணி நேரம் மட்டும் அங்கிருந்தேன். அதன் பின்பு ஹொட்டலுக்குத் திரும்பிவிட்டேன்.

மற்றப்படி பத்திரிகைகளில் வந்த செய்திகளைப் போல எந்தச் சம்பவத்திலும் நான் ஈடுபடவில்லை. தாருன் கான் என்ற பெண்ணை எனக்குத் தெரியாது. அவரை நான் சந்திக்கவுமில்லை. என் வாழ்க்கையில் ஒரே ஒரு முறை அப்போதுதான் 'பார்'க்குப் போனேன்.

அதுவே இப்படி பெரிய பிரச்சினையைக் கொண்டுவந்து விட்டிருக்கிறது. நான் கிரிக்கெட் சூதாட்டத்தில் எந்த வகையிலும் சம்பந்தப்படாதவன். இது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இவ்வாறு முரளிதரன் தெரிவித்தார்.

# 14 பாடசாலை அணிகள் மோதும் கிரிக்கெட் போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்—

வடக்கு-கிழக்கு மாகாணமட்ட தோல்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை காலை ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டித் தொடரில் 14 பாடசாலை அணிகள் இடம்பெற்றுள்ளன. ஏ பிரிவில் யாழ்.மத்திய கல்லூரி, மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகியனவும்,

பி பிரிவில் - யாழ்.இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆகியனவும்,

சி பிரிவில் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, ஸ்கந்தவரோதய கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி ஆகியனவும்,

டி பிரிவில் கனகரத்தினம் மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, விக்ரோறியாக் கல்லூரி ஆகியனவும் இடம்பெற்றுள்ளன.

நாளை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி மோதவுள்ளது.

இதேவேளை, சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி மோதவுள்ளது.

# ஐ.சி.சி சுப்பர் சீரிஸ் தொடரில் சச்சினுக்கு பதில் இன்ஸமாம்?



இஸ்லாமாபாத்—

சுப்பர் சீரிஸ் தொடரில் சச்சின் டெண்டுல்கருக்குப் பதிலாக இன்ஸமாம் இடம் பெறலாமென பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தகவல்கள் தெரிவித்தன.

அவுஸ்ரேலிய, உலக லெவன் அணிகள் மோதும் சுப்பர் சீரிஸ் கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் தொடங்கவுள்ளது. அவுஸ்ரேலியாவில் நடக்கும் இந்தத் தொடரில் மூன்று ஒருநாள் மற்றும் ஆறுநாள் கொண்ட டெஸ்ட் போட்டி ஒன்றும் நடைபெறவுள்ளது. இதற்கான உலக லெவன் அணியில் சச்சின் டெண்டுல்கர் இடம்பெற்றுள்ளார். இடது முழங்கை (டெனிஸ் எல்போ) காயம் காரணமாக சத்திரசிகிச்சை செய்துள்ள இவர், இன்னும் முழுமையாகக் குணமடையவில்லை.

இதனால், தொடரில் விளையாட வேண்டுமெனில் எதிர்வரும் 21ஆம் திகதிக்குள் இவர் உடல்தகுதியை நிரூபிக்கவேண்டுமென சர்வதேச கிரிக்கெட் சபை காலக்கெடு விதித்துள்ளது. இந்தநிலையில், சச்சினுக்குப் பதிலாக பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்ஸமாம் தெரிவு செய்யப்படலாமெனத் தகவல்கள் வெளிவந்துள்ளன. பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில்-

சச்சின் உடல் தகுதியை நிரூபிக்கத் தவறினால், அவருக்குப் பதிலாக இன்ஸமாம் சேர்க்கப்படலாம். ஆனால் இது இன்னும் முடிவாகவில்லை. எதிர்வரும் 21ஆம் திகதி ஐ.சி.சி தனது முடிவை அறிவிக்குமென எதிர்பார்க்கிறோமென்றார்.

இன்ஸமாம், அவுஸ்ரேலியாவுக்கு வருவதற்கான கடவுச்சீட்டு, நுழைவுச் சீட்டு போன்ற பயண ஏற்பாடுகளை தயார்செய்து வைக்குமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கூறியுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன. கடந்தமாதம் அறிவிக்கப்பட்ட உலக லெவன் அணியில் வாய்ப்புக் கிடைக்காத இன்ஸமாமுக்கு, தற்போது சச்சினின் வடிவத்தில் அதிஷ்டம் வந்துள்ளது.

இதேவேளை, உலக லெவன் அணியில் இடம்பெற்றுள்ள தென்னாபிரிக்காவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் கிப்ஸ் இந்தப் போட்டித் தொடரில் பங்கேற்பதிலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இவருக்கு காயம் ஏற்பட்டுள்ளதால், அவுஸ்ரேலியாவுக்கு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆதர் கூறுகையில்-

கணுக்கால் காயம் காரணமாக கிப்ஸ் சத்திர சிகிச்சை செய்துள்ளார். இந்த நிலையில் அவரால் சுப்பர் சீரிஸ் தொடரில் பங்கேற்க முடியாது என கூறினார்.

# ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி பெப்ரவரி 14ஆம் திகதி ஆரம்பம்!

## புதிய முறைப்படி இம்முறை போட்டிகள்



லாகூர்—

9ஆவது ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (2006) பெப்ரவரி மாதம் பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமான் ஆகிய 6 அணிகள் பங்கேற்கின்றன.

இவை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பங்களாதேஷ் ஆகியவை ஒரே பிரிவில் இடம்பெற்றுள்ளன. இந்தியா, போட்டியை நடத்தும் பாகிஸ்தான், ஓமான் ஆகிய அணிகள் மற்றொரு பிரிவிலும் இடம்பெற்றுள்ளன.

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்தத் தடவை புதிய முறை அறிமுகப்படுத்தப்படுகிறது. அதன்படி 6 அணிகளிடையே முதலில் லீக் ஆட்டங்கள் நடைபெறும். இதன் முடிவில் புள்ளிகளின் அடிப்படையில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் 'சுப்பர் நான்கு' சுற்றில் மோதும்.


இதில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதிபெறும். போட்டி அட்டவணை வருமாறு

பெப் 14. பாகிஸ்தான்-ஓமான் (கராச்சி)
பெப் 14. இலங்கை-பங்களாதேஷ் (கராச்சி)
பெப் 15. பங்களாதேஷ்-ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (கராச்சி)
பெப் 15. இந்தியா-ஓமான் (கராச்சி)
பெப் 16. இந்தியா-பாகிஸ்தான் (கராச்சி)
பெப் 16. இலங்கை-ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (கராச்சி)
'சுப்பர் நான்கு' போட்டிகள் -
பெப் 19. ஏ1-பி1 அணிகள் (லாகூர்)
பெப் 20. ஏ2-பி2 அணிகள் (லாகூர்)
பெப் 21. ஏ1-ஏ2 அணிகள் (லாகூர்)
பெப் 23. ஏ2-பி1 அணிகள் (லாகூர்)
பெப் 24. ஏ1-பி2 அணிகள் (லாகூர்)
பெப் 25. பி1-பி2 அணிகள் (லாகூர்)
பெப் 27. இறுதிப்போட்டி (லாகூர்)

# அணியில் நிலவும் பிரச்சினைகளுக்கு விரைவில் சுமுக தீர்வு காணப்படும்!

## மேற்கிந்திய வீரர் லாறா

ஜமெக்கா—



மேற்கிந்தியத் தீவுகள் அணியில் நிலவிவரும் பயிற்சியாளர்களுக்கு விரைவில் முடிவு ஏற்பட்டு முன்னரைப் போன்ற வலுவான அணியாக மாறுமென மேற்கிந்திய நட்சத்திர வீரர் பிறைன் லாறா தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் கலிஸ் நடத்தும் நிதி சேகரிப்பு போட்டியில் ஆடிவரும் லாறா இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில் -

விளம்பர ஒப்பந்த பிரச்சினையில் வீரர்களுக்கும் கிரிக்கெட் சபைக்கும் இடையே மோதல் நீடித்து வருகிறது. இந்த மோதல்கள் அவுஸ்ரேலிய சுற்றுப் பயணத்துக்கு முன்னதாகத் தீர்ந்துவிடும்.

2007இல் நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டியில் நான் பங்கேற்பேன். அதுவரை அதிகமான போட்டிகளில் கலந்துகொள்ளமாட்டேன் என்று அவர் மேலும் கூறினார்.

# தகாத முறையில் மாணவர்களைக் கண்டித்தால் வலயக்கல்விப் பணிப்பாளர்களிடம் முறையிடலாம்



யாழ்ப்பாணம் —

யாழ் குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் புதிதாக மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது லஞ்சம் பெறுதல் மற்றும் மாணவர்களை தகாத முறையில் தண்டித்தல் போன்ற சம்வங்கள் நடைபெறின் சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு உடன் தகவல் தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

வலயக்கல்வி அலுவலகங்களின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை உடன் நிறுத்தும் வகையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் மதியம் 2 மணியளவில் யாழ் மனித உரிமை ஆணைக்குழு இணைப் பதிகாரி றோகித பிரியதர்சன தலைமையில் நடைபெற்றது.

இந்த விசேட நிகழ்வில் தற்போது மாணவர்களுக்கு இழைக்கப்படும் மனித உரிமை மீறல்களை எவ்வாறு தடுப்பது, ஆசிரயர்கள் அதிபர்களுக்கு ஏற்படும் மனித உரிமைமீறல்களை எவ்வாறு தடுப்பது போன்ற விடயங்கள் ஆராயப்பட்டதுடன் பாடசாலை மாணவர்கள் புதிதாக பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளும் போது லஞ்சம் வேணடுவது முற்றாக நிறுத்தப்படவேண்டும் எனவும் பாடசாலை மாணவர்கள் அடித்து தண்டிக்கப்படுவது முற்றாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண சட்டத்தரணிகள் சங்கத் தலைவி சாந்தா அபிமன்ன சிங்கம் நான்கு வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சேவாலங்கா நிறுவன உதவியுடன்

# கொட்டடி, சுப்பர் மடம் பகுதிகளில் நிரந்தர வீடுகளை அமைக்க நடவடிக்கை

சுதுமலை —

சேவா லங்கா நிறுவனத்தினர் சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கொட்டடி, சுப்பர் மடம் பகுதிகளில் 210 நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நிரந்தர வீடமைப்புக்கென ஒதுக்கப்பட்ட காணிகளில் 60 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் - பயனாளிகள் நாளொன்றுக்கு 400 ரூபா சம்பளத்துடன் வேலை செய்து வருவதாக சேவா லங்கா நிறுவன சுனாமித் திட்ட முகாமையாளர் தெரிவித்தார்.

இடைத் தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் அதேவேளை, அவர்களுக்கான வீடமைப்புக் காணிகளை அவர்களே துப்பரவு செய்வதால் மிகவும் வேகமாக வேலைகள் இடம் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (91)

# சுகாதார பரிசோதகர்களுக்கான பயிற்சி நெறி

யாழ்ப்பாணம் —

பொது சுகாதார பரிசோதகர்களுக்கான பயிற்சி நெறி ஒன்று நடத்தப்படவுள்ளதாக மாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி வகுப்புகள் ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்படும் எனவும் - இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 49 பொது சுகாதார பரிசோதகர்கள் பங்கு பற்றவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பண்ணையில் நீர்ப் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மார்புநோய் சிகிச்சை நிலையமும், மருந்துவ களஞ்சியமும் வெகுவிரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தெல்லிப்பளை வைத்தியசாலையில் மீண்டும் கதிரியக்க சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசலையில் இருவாரங்களாக செயலிழந்திருந்த எக்ஸ்ரே கதிரியக்க சேவை நேற்று முன்தினம் முதல் மீள இயங்க ஆரம்பித்துள்ளதாக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

எக்ஸ்ரே கதிரியக்க சேவைகளைப் பெற விரும்புபவர்கள் இந்த சேவையை பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை, சாவகச்சேரி, மானிப்பாய் வைத்தியசாலைகளில் நிலவும் மருத்துவர்களின் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மருத்துவர் ஒருவரும், மானிப்பாய் மருத் துவமனைக்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஒருவரும் கடந்த 1ஆம் திகதி தொடக்கம் நிய மிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை மீள இயங்க தொடங்கிய பின்னர் நீண்ட நாட்களாக ஆளணிப் பற்றாக்குறையுடன் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவில் சிறப்புற நடைபெற்ற ஆக்கப்பொருள் கண்காட்சி !



நெடுந்தீவு —

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவில்- நெடுந் தீவு பிரதேச முன்பள்ளி சிறார்களின் ஆக்கப் பொருள் கண்காட்சியும், கலைநிழ்வும் கடந்த வியாழக் கிழமை நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை பராமரிப்பு நிலைய மண்டபத்தில் போதகர் ஆர்.ஜோண் செல்வம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

தீவக வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளரும், நிகழ்வின் பிரதம விருந்தினருமான எஸ்.ஸ்ரனிஸ்லாஸ் கண்காட்சியை வைபவரீதியாக திறந்துவைத்ததைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள சுமார் ஐந்து முன்பள்ளி சிறார்களதும் அவர்களது பெற்றோர்கள், ஆசிரியர்களதும் ஆக்கங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (113)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்த்தர் படுகாயம்

சங்கானை —

வீதியோரத்தில் நின்றவர் மீது வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மோதியதால், தலையில் பலத்த காயம் ஏற்பட்ட ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சங்கானையில் அமைந்துள்ள மதுபானசாலையின் முன்பாக தனது நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த அராலி வீதி, சங்கானையைச் சேர்ந்த செல்வநாயகம் என்பவர் மீது - சித்தங்கேணிப் பகுதியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் தலையில் படுகாயமுற்றார்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவர் அதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அதே வீதியில் சைக்கிளில் வந்த சங்கானையைச் சேர்ந்த ஜோர்ஜ் என்பவரையும் மோதியுள்ளனர். (48)

# இடமாற்றம்

தென்மராட்சி —

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் எழுதுநராகக் கடமையற்றிய ப.இராககுதன் யாழ்.மாவட்ட செயலகத்தில் உள்ள தேர்தல் அலுவலகத்துக்கும், தேர்தல் அலுவலகத்தில் எழுதுநராக கடமையாற்றிய நரேந்திரன் தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கும் ஒத்துமாறல் அடிப்படையில் இடமாற்றம் பெற்றுள்ளனர். (24)




அன்னை நாகா புட்சிற்றியின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டியும், நல்லூர் உற்சவத்தையும் முன்னிட்டும் நடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றஅதிர்ஷ்ட சாலிக்கு மோட்டார் சைக்கிளை நிறுவன நிதியாளர் கா.விஷ்வானந்தமூர்த்தி பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# சைவ சித்தாந்தபண்டிதர் தேர்வில் சித்தியடைந்தோர்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்திய பரீட்சைகளில் பிரவேசபண்டிதர் தேர்வில் நான்குபேரும், பாலபண்டிதர் தேர்வில் பத்துப்போரும், சித்தாந்த பண்டிதர் தேர்வில் இருவரும் சித்தியடைந்துள்ளனர் அவர்களின் விபரம் வருமாறு -

*பிரவேச பண்டிதர் தேர்வு*

தவமணி வீரய்யாப்பிள்ளை (கொக்குவில்) 3ஆம் பிரிவு , கல்பனா கருணாநிதி (பரந்தன்) 2 ஆம் பிரிவு, மேகனா பூலோகநாதன் (முழங்காவில்) 2 ஆம் பிரிவு , வியூஷணி செண்பகவரதர்சேனாதிராஜா (யாழ்ப்பாணம்) 2ஆம் பிரிவு.

*பாலபண்டிதர் தேர்வு*

சபாநாதன் பாரதி (கோண்டாவில்) 2 ஆம் பிரவு, ஜெயச்சித்திரா ஜெயசிங்கம் (காரைநகர்) 2 ஆம் பிரிவு, சியாமினி இராசரத்தினம்(அச்சுவேலி) 1 ஆம் பிரிவு, சறோஜினிதேவி தம்பிராசா (யாழ்ப்பாணம்) 2 ஆம் பிரிவு, சண்முகராஜா சிறிகாந்தன் (யாழ்ப்பாணம்) 2ஆம் பிரிவு, சிவாணி நடராசா (கந்தர் மடம்) 2ஆம் பிரிவு, த.அமலதாஸ் (யாழ்ப்பாணம்) 2ஆம் பிரிவு, இ.திருலோகவதனி (கந்தர் மடம்) 2ஆம் பிரிவு, செ.கோகிலா (கரவெட்டி) 2ஆம் பிரிவு, க. சிவாஜினி (கரவெட்டி) 3ஆம் பிரிவு.

*சித்தாந்த பண்டிதர்*

விமலாவதி கந்தையா (இளவாலை) 1ஆம் பிரிவு, வெற்றிவேலு வரதிதாசன் (வட்டுக் கோட்டை) 2 ஆம் பிரிவு ஆகியேரே சித்தியடைந்தவர்களாவர்.

## உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

நெடுந்தீவு —

உள்ளூராட்சி வார நிகழ்வுகளையொட்டி நெடுந்தீவு பிரதேச சபையினர் சமூக பொருளாதார ரீதியில் பல நிகழ்வுகளை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை சிறார்களின் ஆக்கப் பொருட் கண்காட்சியை நடத்தி - பரிசில் வழங்கல், மரக்கன்றுகள் நாட்டுதல், சனசமூக நிலையங்கள் இடையே விளையாட்டு நிகழ்வுகளை நடத்தி பரிசில் வழங்கல், குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கல், கட்டாக்காலி நாய்களை அழித்தல், பொது இடங்களை துப்பரவு செய்தல் உட்படபல நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். (113)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : ரா.திவ்வியா
முகவரி : வல்வெட்டித்துறை.

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------
முகவரி :----------
பிறந்த ஆண்டு:----------

----------
பெற்றோர் ஒப்பம்

# கிண்ணம் ஒருவருக்கு மட்டும்

International Cricket Council



# விளையாட்டு அரங்கு

ICC முதன் முறையாக நடத்தவுள்ள SUPER SERIES அடுத்த மாதம் அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ளது. 3 ஒருநாள் போட்டிகளையும், ஒரு டெஸ்ட் போட்டியையும் உள்ளடக்கியதான இந்தத் தொடரில் அவுஸ்ரேலிய அணியை எதிர்த்து, உலக அணி மோதவுள்ளது.

இவ்விரு கிரிக்கெட் போட்டிகளுக்கும் ICC உத்தியோகபூர்வ அந்தஸ்து அளித்துள்ளமையால், போட்டிகளில் விறுவிறுப்புத் தன்மை அதிகளவில் காணப்படுமென்றே எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் ஒருநாள் போட்டிகளைவிட, டெஸ்ட் போட்டியே முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

ஏனெனில் ICC ஏற்கனவே சுனாமி நிவாரண நிதிக்காக நடத்திய இரண்டு ஒருநாள் போட்டிகளுக்கு உத்தியோகபூர்வ அந்தஸ்து வழங்கியுள்ளமையால், இந்த ஒருநாள் தொடர்களுக்கு அந்தஸ்து வழங்கியதில் விசேடமெதுவும் இல்லையெனலாம்.

ஆனால் டெஸ்ட் போட்டி குறித்து உத்தியோகபூர்வ அந்தஸ்தென்பது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. வழமையாக இரு சர்வதேச அணிகள் மோதும் டெஸ்ட் போட்டிகளுக்கே உத்தியோகபூர்வ அந்தஸ்து வழங்கப்பட்டு, அதுவே வீரர்களின் கணக்கிலெடுக்கப்படும். ஆனால் ஒரு சர்வதேச அணிக்கெதிராக டெஸ்ட் போட்டிகளில் உலக அணி மோதுவது இதுவே முதல் தடவை.



கண்கள் பூத்திருக்க காத்திருக்கிறோம்.

அத்தோடு இந்த டெஸ்ட் போட்டி வழக்கத்துக்கு மாறாக 6 நாட்கள் கொண்ட போட்டியாக அமைவது இன்னொரு சிறப்பம்சம். இந்தப் போட்டி ஒக்ரோபர் 14-19 வரை சிட்னி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிரிக்கெட்டின் ஆரம்ப காலங்களில் வேறு பொழுதுபோக்கு வசதிகள் ஏதுமின்மையால் ஒரு டெஸ்ட் போட்டியே 10, 12 நாட்கள் வரை ஆடப்பட்ட வரலாறும் உண்டு. ஆனால் இப்போது 5 நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டிகளிலேயே ரசிகர்களின் ஈடுபாடு குறைந்து வருவதால், அதனை 3,4 நாட்களாகக் குறைக்க வேண்டுமென்ற கருத்து பல தரப்பிலும் மேலோங்கியுள்ள ஒரு நிலையில் - ICC 6 நாட்கள் கொண்ட ஒரு டெஸ்ட் போட்டியை நடத்தவிருப்பது சில சர்ச்சைகளை உண்டு பண்ணினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனாலும், ICC யின் இந்தச் செயற்பாட்டை இரண்டு காரணங்களுக்காக தவறென புறந்தள்ளிவிடவும் முடியவில்லை.

ஒன்று எதிர்பாராமல் ஓரிரு நாட்கள் மழை குறுக்கீடு செய்வதை மனங்கொள்வோமானால், 6 நாட்கள் இருப்பது ஒரு வரப்பிரசாதமே. அதாவது ஒருநாள் போட்டிகளுக்கு RESERVE DAY ஒதுக்குவது மாதிரி எனலாம்.

இன்னொன்று 5 நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டிகளே சில சமயங்களில் சமநிலையில் முடிவதால் - இன்னொரு நாளை அதிகரிப்பதன் மூலம் போட்டியில் முடிவொன்று நிச்சயம் பெறப்படும் என்ற ரீதியிலும் இதனை மேற்கொண்டிருக்கலாம்.



சச்சின் - லாறா நல்ல திட்டம் தான்

ஏனென்றால், இவ்வாறான ஒரு போட்டி சமநிலையில் முடிவுற்று, கிண்ணத்தை இரு அணித்தலைவர்களும் பகிர்ந்து கொண்டு, சிரித்தபடி 'போஸ்' கொடுப்பது PHOTO வுக்கு நன்றாக இருந்தாலும், ரசிகர்களுக்கு அதில் திருப்தியிருக்கும் என்பதில் ஏகோபித்த கருத்து இருப்பதில்லை.

எனவே டெஸ்ட் போட்டிக்கான கிண்ணத்தை ஒன்றில் கிரேம் ஸ்மித் கைப்பற்ற வேண்டும் அல்லது றிக்கி பொண்டிங் கைகளில் அது தவழ வேண்டும் என்பதையே கிரிக்கெட் ரசிகர்கள் விரும்புவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

- விமலன்.

# தேவையற்ற விமர்சனமோ?



இயன் செப்பல் சொல் வீரன்

2005 ஆஷஸ் தொடர் - அவுஸ்ரேலியாவுக்குப் பெரும் வீழ்ச்சி என்பதில் சந்தேகமில்லை. பத்தொன்பது வருடங்களின் பின் ஆஷஸ் கிண்ணம் கைமாறிப்போனது றிக்கி பொண்டிங் தலைமையிலான அணிக்கு மட்டுமல்ல. பயிற்றுநர் ஜோன் புக்கானனுக்கும் பெருத்த தலை குனிவுதான். பொதுவாக அணியின் வெற்றி - தோல்விகளில் பலர் தொடர்பாகச் சர்ச்சைகள் உருவாகும். அதில் பயிற்றுநர் சம்பந்தப் படுத்தப்படுவது தவிர்க்கவே முடியாதது. இப்பொழுது சர்ச்சைக்குள்ளாகி இருப்பவர் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் ஜோன்புக்கானன். இவரின் பயிற்றுநர் ஒப்பந்தகாலம் வருகின்ற மாதத்துடன் முடிவடையவிருக்கிறது. ஆனால், 2007 இல் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகள் வரையும் பயிற்றுநர் பதவியில் தொடரவே இவர் விரும்பியிருந்தார். ஊராவுக்கு இது சர்ச்சைக்குரிய விடயமே அல்ல. ஏனெனில் இவரது காலத்தில் அவுஸ்ரேலியா பெற்ற டெஸ்ட் வெற்றிகள் 54. தோல்விகள் வெறும் பதினொன்று மட்டுமே. இது இவர் காலத்தில் மொத்தம் அவுஸ்ரேலியா விளையாடிய 76 டெஸ்ட் போட்டிகளிலிருந்து பெறப்பட்ட தரவு.

இந்த நிலையில் அவுஸ்ரேலியா சென்றதும், கிரிக்கெட் அவுஸ்ரேலியாவுக்கும், ஜோன் புக்கானனுக்கும் இடையில் கலந்துரையாடல்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதே வேளை - முன்னாள் அவுஸ்ரேலிய அணித் தலைவரும், தற்போதைய கிரிக்கெட் வர்ணனையாளருமாகிய இயன் செப்பல் இவர் மீது கடும் கண்டனத்தைத் தெரிவிக்கிறார். இது இவரது நியாயபூர்வமான கருத்தா அல்லது காழ்ப்புணர்ச்சியா என்பது புரியவில்லை. அதாவது ஆஷஸ் பின்னடைவைச் சாக்காகக் கொண்டு, அவுஸ்ரேலிய அணித்தலைவர் றிக்கி பொண்டிங், ஜோன் புக்கானனிடம் அறிவுரைகள் பெற்றதைவிட, அணியின் சிரேஷ்ட வீரர்களான ஷேன் வோன், கிளென் மக்ரா ஆகியோரிடம் ஆலோசனைகளைப் பெற்றிருக்கலாம் என்று கூறியிருக்கிறார்.

முன்பொருமுறை முன்னாள் இந்தியப் பயிற்றுநர் ஜோன் றைட், பயிற்றுநர்கள் பற்றிக் கூறிய கருத்தொன்றைப் பிடித்துக் கொண்டு தொங்குகிறார் இயன்செப்பல். பயிற்றுநர்கள் பெரிதாகச் செய்வது ஒன்றுமில்லை. உண்மையில் வீரர்களின் பங்குதான் பெரிதென்று கூறியதை மேற்கோள் காட்டி, அவுஸ்ரேலிய அணி பொறுத்தும் இதேநிலைமைதான் என்று நிறுவ முயற்சிக்கிறார் இயன் செப்பல்.



ஜோன் புக்கானன் செயல் வீரன்

ஜோன் புக்கானனின் சாதனைகள் புறந்தள்ளப்படத் தக்கனவல்ல. இன்னும் நிறையவே அவரது சாதனைகள் பற்றிக் கூறலாம். 1999 இறுதி, 2001 இறுதி இடையில் தொடர்ந்து பதினாறு டெஸ்ட் வெற்றிகள் அவுஸ்ரேலியா பெற்றதும் ஜோன் புக்கானனின் காலத்தில்தான். தென்னாபிரிக்காவில் நடைபெற்ற 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் முதன்மை பெற்று கிண்ணம் வென்றதும் ஜோன் புக்கானனின் காலத்தில்தான். ஆகவே இயன் செப்பல் கூறும் கண்டனங்கள் பெரிதாக எடுப்பது என்று சொல்வதற்கில்லை. இன்றைய நிலையில் இங்கிலாந்து அணி உயர் நிலையிலிருப்பது உண்மை. பயிற்றுநர் டங்கன் பிளெட்சரின் திறமையும் போற்றத் தக்கதுதான்.

அதனைக் கொண்டு ஜோன் புக்கானன் தாழ்ந்து விட்டதாக இயன் செப்பல் காட்ட முயற்சிப்பது சரியாகப்படவில்லை. இதுவரையில் கிரிக்கெட் அவுஸ்ரேலிய நிர்வாகமோ, அவுஸ்ரேலிய அணி வீரர்களோ ஜோன் புக்கானன் பற்றி குறை கூறியதாகத் தெரியவில்லை. ஆனால் இயன் செப்பல் ஏன் துள்ளிக் குதிக்கிறார் என்று தான் புரியவில்லை.

- ஜோசப் கிருஷ்ணா.

# ஆயிரத்தில் ஒருவன்



றோஜர் பெடரர் சின்னவர்

அமெரிக்க ஓபன் ரெனிஸ் சம்பியன்ஷிப் போட்டிகளின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சுவிற்சர்லாந்தின் றோஜர்பெடரர் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரிப்பார் என்பதில் பெருமளவு சந்தேகம் இருக்கவில்லை. அதுவே நிதர்சனமும் ஆயிற்று. பெடரர் 2001இல் விம்பிள்டன் ரெனிஸ் போட்டிகளின் நான்காம் சுற்றில் பீட் சாம்பிராஸைத் தோற்கடித்தபோது, சர்வதேச ரெனிஸ் உலகில் பளீரென ஒரு மின்னல் அடித்தது போல இருந்தது. துரதிஷ்டவசமாக தொடர்ந்த இரண்டு வருடங்கள் பெடரருக்குச் சொல்லும்படியாக அமையவில்லை.

2003 விம்பிள்டன் இறுதிப் போட்டியில் மார்க் பிலிப் போஸைத் தோற்கடித்து கிண்ணம் வெல்ல, அன்றில் இருந்து இன்று வரை இவரது வெற்றிகள் இவரை நோக்கிக்குவிந்த வண்ணமே இருக்கின்றன. சமகாலத்தில் இவரளவுக்கு அதீத திறமை வாய்ந்த வீரர்கள் இல்லையெனும் அளவுக்கு, இவரது புகழ் ஓங்கியிருக்கிறது.

2005 அமெரிக்க ஓபன் போட்டிகளில் இவருடன் இறுதிப் போட்டியில் மோதியவர் அமெரிக்காவின் அன்ரீ அகாஸி. இவர் ஒரு ஓயாத போராளி. முப்பத்தைந்து வயதிலும் அசத்திக் கொண்டிருப்பவர். இல்லாவிட்டால் இந்தச் சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டிக்கு வந்திருக்க முடியுமா என்ன? அகாஸி கருத்துக்கூறும் போது -பீட் சாம்பிராஸ் உன்னதமான வீரர் தான், சந்தேகமில்லை. ஆனால் அவருக்கு ஒரு எல்லை வகுக்க முடியும். நான் கண்ட, எதிர்த்து விளையாடிய வீரர்களில் பெடரர் போல ஒரு வீரரைக் கண்டதில்லை. இவரை ஒரு எல்லைக்குள் வைத்துக் கணிப்பிட முடியாது. இவர் அதி உன்னதமானவர் என்று கூறியிருக்கிறார்.

இந்தக் கருத்தைக் கேட்டு தான் அதிர்ந்து போனதாகக் கூறியிருக்கிறார் றோஜர் பெடரர். பீட் சாம்பிராஸ் எங்கே நான் எங்கே என்று சங்கடப்படுகிறார் அவர். என்றாலும் அகாஸியின் கருத்துப் பற்றிக் கூறும் போது -என்னை விட அகாஸி மூத்த வீரர். பல வருடங்கள் பல வீரர்களுடன் மோதியவர். அவரது கருத்திலும் ஏதோ ஒரு கொஞ்சம் உண்மை இருக்கத்தான் செய்யும் போல இருக்கிறது. ஆனால் சிலர் வாழ் நாள் முழுவதுமே உன்னதமானவர்கள் என்று போற்றப்படுவார்கள். பீட்சாம்பிராஸ் அந்த வகைக்குள் அடங்குபவர். நான் அப்படி ஒரு கனவை நனவாக்க இன்னும் எவ்வளவோ தூரம் செல்லவேண்டி இருக்கும். அதெல்லாம் சரிவருமோ தெரியவில்லை என்பவர், தன் இலக்கு ஒன்றையும் குறிப்பிடுகின்றார். பீட் சாம்பிராஸ் வென்ற GRAND SLAMS பதினான்கு. இப்போது பெடரர் பெற்றிருப்பது ஆறு. சாம்பிராஸைத் தாண்டி நிற்கும் ஆசை பெடரருக்கு. அது நிறைவேறும் என்பதே விமர்சகர்கள் கருத்து.



பீட் சாம்பிராஸ் - அகாஷி பெரியண்ணாமார்

- ஜெராட்.

# ஜொலிக்கும் நட்சத்திரங்கள்



மேரி பியர்ஸ் நாளை ஒளிரும்



கிளிஸ்ரர்ஸ் பளிங்குக் கண்ணாடி

இவர் உலகின் முதற்தர வீராங்கனையாகவும் விளங்கியவர். தற்போது தரவரிசையில் நான்காம் இடம் பெறுபவர். இந்த நிமிடத்தின் மகிழ்ச்சியான பெண்மணி. அவர் வேறு யாருமல்ல - பெல்ஜியம் நாட்டின் கிம் கிளிஸ்ரர்ஸ். அமெரிக்க ஓபன் ரெனிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஆரம்பத்தில் இருந்தே ஒரு எதிர்பார்க்கை, பரபரப்பு இருந்தது. காரணம் இந்தப் பிரிவில்தான் நட்சத்திரங்களின் ஆதிக்கம் அதிகம். குறிப்பாக காலிறுதிப் போட்டி நிலையைக் கடந்து இறுதி இலக்கு நோக்கிச் செல்கையில் பல நட்சத்திரங்கள் உதிர்ந்துவிட, இடையில் அரையிறுதிப் போட்டிகளில் மரியா ஷரபோவா, கிம் கிளிஸ்ரர்ஸையும், பிரான்ஸின் மேரி பியர்ஸ் ரஷ்யாவின் டிமென்ரீவாவையும் சந்தித்தனர். இறுதிப் போட்டியில் கிம் கிளிஸ்ரர்ஸ், மேரிபியர்ஸை 6-3, 6-1 என்றவாறு தோல்வியுறச் செய்தார்.

இருபத்திரண்டு வயதான இவர் நான்கு முறை GRAND SLAM இறுதிப் போட்டிகளுக்கு வந்து கிண்ணத்தைத் தவறவிட்டவர். அவரது உபாதைகள் அதற்கு ஒரு காரணமாக அமைந்தாலும், இந்தமுறை அமெரிக்க ஓபன் போட்டிகளில் எந்தக் காரணமும் இடையூறு செய்ய இடமளிக்க மாட்டேன் என்று சபதம் செய்து கொண்ட போதும், இந்த வருடத்தின் பெரும் பகுதியில் உபாதைகளின் தாக்கத்தால் அவதிப்பட்டாலும் அவரது திட்டமிடல் மிகத் திறமையாக அமைந்திருக்கிறது.

கடந்த மூன்று வருடங்களாக எனது தனிப்பட்ட மற்றும் விளையாட்டு வாழ்வின் பல ஏற்ற இறக்கங்கள் காணப்பட்டது உண்மை. நான் இப்போது மிகுந்த சந்தோஷமாக இருக்கிறேன். நான் இந்தமுறை சம்பியன் பட்டம் வெல்ல வேண்டும் என்ற வைராக்கியத்துடனேயே இருந்தேன். அதைச் சாதித்துவிட்டேன் என்று பூரிக்கிறார் கிளிஸ்ரர்ஸ்.

மறுபுறம் மேரிபியர்ஸ் சுற்றுப்போட்டியின் இடை நடுவிலேயே சில உபாதைகளுக்கு உட்பட்டாலும் தைரியம் குலையாதவர் என்பதை நிரூபித்துவிட்டார்.

இல்லாவிட்டால் இவரை ஒத்த நட்சத்திரங்களை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு வந்திருக்க முடியாது. இந்த வருடம் நடைபெற்ற பிரெஞ் ஓபன் போட்டிகளில் இறுதிப்போட்டிக்கு வந்தவர் இவர். ஆனால் ஜஸ்ரின் ஹெனின் ஹார்டென் இவரது கிண்ணத்தைத் தட்டிப் பறித்துக் கொண்டார். அதே போல அமெரிக்க ஓபன் இறுதிப்போட்டிக்கு வந்தார். ஆனால் கிளிஸ்ரர்ஸ் கிண்ணத்தைத் தட்டிக்கொண்டு போய் விட்டார்.

இந்த வகையில் மேரி சிறிது கவலைப்பட்டாலும் வெற்றி வீராங்கனையை வாயாரப் புகழத்தவறவில்லை. நான் எதிர்கொண்ட எல்லா வீராங்கனைகளையும் விட கிளிஸ்ரர்ஸ் வேகமானவர். சில சந்தர்ப்பங்களில் நான் அல்லாடிப் போனேன். அதோடு அவர் என்னை பிழையாக விளையாடச் செய்யும் நுணுக்கத்தையும் கையாண்டார். அவரே வென்றார் என்று முடிக்கிறார்.

ஒருவாறாக இந்த வருடத்தின் நான்கு GRAND SLAMS களும் முடிவடைந்து விட்டன. அவுஸ்ரேலிய வெற்றிக் கிண்ணம் செரினா வில்லியம்ஸ் பெற, பிரெஞ் ஓபன் கிண்ணத்தை ஜஸ்ரின் ஹெனின் ஹார்டென் தட்டிக்கொள்ள, விம்பிள்டன் கிண்ணத்தை வீனஸ் வில்லியம்ஸ் பெற, இறுதியாக அமெரிக்க ஓபன் கிண்ணம் கிளிஸ்ரர்ஸுக்கு வாய்த்திருக்கிறது.

அத்துணை ரெனிஸ் மகளிர் நட்சத்திரங்களும் கண் கூச வைக்கும் பிரகாசமுடையவை. இதனால்தான் எந்த ஒரு நபரும் ஆதிக்கம் செலுத்தமுடியவில்லை போலும்.

| அமெரிக்க ஓபன் ரெனிஸ் வெற்றிக் கிண்ணம் | | நாடு |
|---|---|---|
| 2005 | கிம்கிளிஸ்ரர்ஸ் | பெல்ஜியம் |
| 2004 | சுவெட்லானா குஷ்நெட்சோவா | ரஷ்யா |
| 2003 | ஜஸ்ரின் ஹெனின் ஹார்டென் | பெல்ஜியம் |
| 2002 | செரினா வில்லியம்ஸ் | அமெரிக்கா |
| 2001 | வீனஸ் வில்லியம்ஸ் | அமெரிக்கா |
| 2000 | வீனஸ் வில்லியம்ஸ் | அமெரிக்கா |

- மடலின்.

# அளவுகோல்கள் வளையக்கூடாது



ரஸல் ஆர்னல்ட் தனித்த பிறவி

இலங்கை கிரிக்கெட் சபை ஒரு சில வகைக்குள் கிரிக்கெட் வீரர்களை அடக்கி அவர்களை ஒப்பந்த முறைக்குள் கொண்டு வந்திருக்கிறது. தற்போது ஒரு புதிய சர்ச்சையொன்று உருவாகியுள்ள நிலையில், தாங்கள் பின்பற்றுகிற நடைமுறைகளில் எவ்வித மாற்றங்களையும் செய்யப்போவதில்லையென்றும், தற்போது நடைமுறைப்படுத்தும் ஒப்பந்த முறை சரியானதே என்றும் கூறியுள்ளது இலங்கைக் கிரிக்கெட் சபை. இதனை இலங்கைக் கிரிக்கெட் அணித் தெரிவுக்குழுவும் ஏற்றுக்கொண்டுள்ளது.

நடந்தது இதுதான். அதாவது புதிய ஒப்பந்த முறையொன்றை அறிமுகப்படுத்திய இலங்கைக் கிரிக்கெட் சபை ஆரம்பத்தில் பதினொரு வீரர்களை ஒப்பந்தம் செய்து கொண்டது. இவர்களின் ஒப்பந்தமானது இலங்கையின் முதன்மையான வீரர்களை உள்ளடக்கியது என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இதனைத் தொடர்ந்து இரண்டாம் நிலை வீரர்களைக் கொண்ட ஒப்பந்தம் ஒன்றும் செய்யப்பட்டது. இதில் பதின்மூன்று வீரர்கள் அடங்கியிருந்தார்கள். இவர்களுள் அநேகர் இலங்கையின் 'A' அணி வீரர்களாகவே இருந்தார்கள். இந்த ஒப்பந்த நடைமுறையில் இலங்கையின் தேசிய அணி வீரர் ரஸல் ஆர்னல்ட் இரண்டாம் நிலை ஒப்பந்த வீரர்களுக்குள் அடங்குவதால் அவர் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார். இந்த நிலையில் தான் தாங்கள் பொதுக்கொள்கை ஒன்றையே பின்பற்றி வருவதாக இலங்கைக் கிரிக்கெட்சபை கூறியுள்ளது.

இதேவேளை ரஸல் ஆர்னல்ட் இதுவரையில் நாற்பது டெஸ்ட் போட்டிகளிலும் நூற்றுக்கு மேற்பட்ட ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் விளையாடியவர். ஆனால் சில சிரேஷ்ட விளையாட்டு வீரர்கள் பெறும் ஊதியத்தை விட மிகக் குறைந்த தொகையையே இவர் பெறவேண்டியுள்ளது. முதல்நிலை பதினொரு வீரர்களுக்குள் அடங்கும் ஆறு பேர் வருடாந்தத் தொகையாக 60,000 அமெரிக்க டொலர்கள் ஊதியம் பெறுகிறார்கள். ஏனையவர்களும் கணிசமானதொரு தொகையையே பெறுகின்ற நிலையில், ரஸல் ஆர்னல்ட் வருடாந்தம் 2000 அமெரிக்க டொலர்கள் மட்டும் ஊதியமாகப் பெற நிர்ணயித்திருப்பது பாரிய வித்தியாசம் ஒன்றைக் காட்டுகிறது.

இதனைப் பற்றிக் கருத்துக் கூறும் இலங்கைக் கிரிக்கெட் சபையினர், உண்மையில் ஒப்பந்த முறை அறிமுகப்படுத்தப்பட்ட போது, ரஸல் ஆர்னல்ட் உயர்தரத்தில் இருக்கவில்லை. அதாவது இலங்கை முதற்தர வீரர்கள் பதினைந்து பேருக்குள் ஒருவராகக் கூட இவர் இருக்கவில்லை. இந்த நிலையில் முதல் தர வீரர்களுடன் சமமான ஊதிய ஒப்பந்தத்தில் உள்வாங்கப்படவில்லை என்று ஆதங்கப்படுவது பொருத்தமானதாகத் தெரியவில்லை என்று கூறுகின்றனர்.


எந்த ஒரு வீரரும் உயர் தகைமையைக் கொண்டிருந்தால் மட்டுமே முதன்மை நிலை ஒப்பந்தத்துக்குள் வர முடியும். ரஸல் ஆர்னல்ட் இவ்வருடம் அதிசிறப்பாக விளையாடித் தன் திறமையைக் காட்டினால் அடுத்த வருடம் இவர் முதற்தர நிலைக்கு வர முடியும். ஒருவர் முன்னதாக எத்தனை ஆட்டங்களில் விளையாடினார் என்ற எண்ணிக்கை ஒப்பந்த முறைமைக்குப் பொருந்தாது. நிகழ்காலத்தில் காட்டப்படும் திறமையே முதற்தர நிலைக்குப் பாதையாக அமையும் என்று எடுத்துக்காட்டப்படுகிறது.

இந்தச் சர்ச்சையில் யார் கூறுவது கூடுதல் பொருத்தமான காரணங்கள் என்று ஊகிக்க முடியவில்லை. பல்வேறு படிநிலைகளைக் கடந்து செய்யப்படும் ஏற்பாடுகள் புரிந்து கொள்ளக்கஷ்டமானவை. ஆனால் அதியுயர் பாக்கியம் செய்த அந்த ஆறு பேரும் ஒவ்வொரு ஆட்டத்திலும் அதியுயர் தகைமையைத் தான் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்களா என்றொரு வினாவை எழுப்புகிறார்கள் விமர்சகர்கள்.

இதேவேளை அவர்கள் தாழ் நிலையடைந்து இரண்டாம் நிலை வீரர்கள் உச்சத்திறமையைக் காட்டினால், அப்பொழுது பணப்பரிமாற்றம் எவ்வாறு இருக்கும். முடிந்த ஒப்பந்தம் முடிந்தது தான் என்று பணத்தை தாரை வார்த்துக் கொண்டிருக்கப் போகிறார்களா? புரிவதற்குக் கொஞ்சக்காலம் எடுக்கும். கலங்கித் தெளிய வேண்டும் என்றொன்றிருக்கிற தல்லவா. இப்பொழுது கலங்க ஆரம்பித்திருக்கிறது. தெளியும் போது எல்லாம் வெளிச்சத்துக்கு வரும்.

- நிர்மலன்.

# நான்காவது மனிதன்



கோர்டன் கிறினிட்ஜ் என்றும் நாயகன்



சுனில் கவாஸ்கர் சகாப்தம்

டெஸ்ட் ஆட்டமொன்றில் நான்காவது இனிங்ஸில் இரட்டைச்சதம் போடுவது சாத்தியமா? இது ஒரு சுவையான கேள்வி. ஏனெனில் நான்காவது இனிங்ஸில் இரட்டைச்சதம் போடுவது என்றால் பாரிய TARGET ஒன்றை நோக்கிச் செல்வதாக இருக்கவேண்டும். அந்த அழுத்தத்தில் ஒரு வீரர் இரட்டைச்சதம் போடுவதென்றால் அவர் எத்தகைய வீரராக இருப்பார் என்பதையும் சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

CRICINFO.COM இத்தகைய ஜாம்பவான்கள் ஐந்துபேரைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இதில் அதிகூடிய எண்ணிக்கை 1929/30 இல் இங்கிலாந்துக்கு எதிராக மேற்கிந்தியத்தீவுகள் கென் சிங்ரன் ஓவல் மைதானத்தில் ஜோர்ஜ் ஹெட்லி குவித்த 223 ஓட்டங்கள் குறிப்பிடப்படுகிறது. அடுத்ததாக 2001/2002 இல் நியூஸிலாந்தின் கிறைஸ்ட்சேர்ச்சில் இங்கிலாந்துக்கு எதிராக நேதன் அஸ்ரில் வேகமாகக் குவித்த 222 ஓட்டங்கள் குறிப் பிடப்படுகின்றது. இதற்கடுத்து சுனில் கவாஸ்கர் இங்கிலாந் தின் ஓவல் மைதானத்தில் 1979 இல் பெற்ற 221 ஓட்டங்கள் காட்டப்படுகிறது. இதனை அடுத்த எண்ணிகை 219. இந்த எண்ணிக்கைக்கு உரியவர் இங்கிலாந்தின் பில் எட்ரிச். 1938/39 இல் டர்பன் நகரில் நடைபெற்ற TIMELESS TEST ஆட்டத்தில் இவர் தென்னாபிரிக்காவுக்கு எதிராக இந்த இரட்டைச்சதத்தைப் பெற்றிருந்தார். இறுதியாக 1984 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் மேற்கிந்தியத்தீவுகள் நட்சத்திரம் கோர்டன் கிறினிட்ஜ் சேர்த்த 214 ஓட்டங்கள் எடுத்துக்காட்டப் படுகின்றது.

இந்த ஆட்டத்தில் தோல்வியையே வெற்றியின் பக்கம் மாற்றியவர் கோர்டன் கிறினிட்ஜ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தாலும் மேற்காட்டப்பட்டுள்ள ஏனைய இரட்டைச்சதங்கள் போட்ட வீரர்கள் சார்ந்த அணிகள் வெற்றி பெற்றனவா அல்லது தோல்வி கண்டனவா என்ற விபரத்தைச் சரியாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை. எது எவ்வாறாயினும் இரட்டைச்சதம் என்பது இலகுவில் வீழ்த்தும் மாங்காய் அல்ல. அது எட்டிப் பிடிக்கமுடி யாத நட்சத்திரம். அந்தவகையில் இன்றும் இந்த வீரர்கள் நாயகர்கள் தான்.

- லிவிங்ஸ்ரன்.

விளையாட்டு அரங்கம்


EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

# கிளிநொச்சி துரித காணிச் செயலகத்தால் காணிப் பிணக்குகள் தீர்க்கப்படுகின்றன

கிளிநொச்சி கச்சேரியில் செயற்பட்டு வரும் துரித காணிச் செயலகம், விரைவாகச் செயற்பட்டு மக்களின் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து வருகிறது. காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற் காகச் சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடி பிரச்சினைகளைக் கேட்டறிவதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் செயலானது அண்மைக் காலமாகக் கண்டாவளை, தர்மக்கேணி கிழக்கு, பூநகரி, பல்லவராயன் கட்டு, தர்மபுரம், பிரமந்தனாறு, ஊரியான், ஆலங்கேணி, முரசு மோட்டை, புளியம்பொக்கணை, கரியாலை நாகபடுவான் போன்ற இடங்களுக்குச் சென்று காணிப்பிரச்சினைகளைக் கேட்டறிந்துள்ளது. கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இடங்களுக்கும் சென்று காணிப் பிரச்சினைகள் தொடர்பாக உதவி புரிந்து வருகின்றனர்.

1995ஆம் ஆண்டுக்கு முன்னர் அடாத்தாகப் பிடிக்கப்பட்ட காணிகள் தொடர்பாகக் காணிகளைச் சீரமைப்பதற்கு உதவி செய்து வருகிறது. காணி உரிமை மாற்றம் தொடர்பாகவும், ஏற்கனவே முறையான காணி உரிமையாளர்கள் இருக்கும் போது முறையற்ற விதத்தில் காணிகளைப் பிடித்து வைத்திருப்போர் தொடர்பாகவும் நடவடிக்கை எடுத்து வருகிறது. முறையாகக் காணிகள் வழங்கப்பட்டும், சீர் திருத்தம் செய்யாதவர்களின் உரிமைகளை 1:6 பிரிவின் கீழ்ரத்துச் செய்தல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

களநிலைக்குச் செல்லும் போது கிராம அலுவலர்களுடன், காணி அபிவிருத்திச்சபை, காணிக் குழு, புனர்வாழ்வுச் சபை போன்றவை நல்ல முறையில் அனுசரித்து ஒத்துழைப்பு வழங்கி வருவதாகக் கிளிநொச்சி உதவிக் காணி ஆணையாளர் சீ.சிவ சொரூபநாத பிள்ளை தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் கடும் வரட்சி நிலவுகிறது

கிளிநொச்சியில்—

கிளிநொச்சியில் தற்போது கடும் வரட்சி நிலவி வருகின்றது. கடும் வெய்யில் காரணமாக நீர் நிலைகள், கிணறுகள் வற்றத் தொடங்கியுள்ளன. ஏ9 வீதிக்கு மேற்குப் புறமாக உள்ள பிரதேசங்களே இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் உள்ள பாரிய குளங்களும் வற்றத் தொடங்கியுள்ளது. இதனால் கடும் நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி நகரத்தை அண்டிய பகுதிகளிலும் குடிநீர்ப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பாக துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# செல்வா நகரில் 200 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி—

கிளிநொச்சி செல்வா நகரில் கடந்த 16ஆம் திகதி நிரந்தரக் காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்தக் காணி அனுமதிப்பத்திரங்களைக் கரைச்சிப் பிரதேச செயலர் க.சுலோஜனா பொது நோக்கு மண்டபத்தில் வைத்து வழங்கினார்.

அன்றைய தினம் சுமார் 200 அனுமதிப்பத்திரங்கள் மட்டுமே வழங்கப்பட்டன. மிகுதி 220 அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக செல்வா நகர் கிராம அலுவலர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் காணி அலுவலர், கிராம அலுவலர் மற்றும் அலுவலர்களும் கலந்து கொண்டனர். இதனால் சுமார் 25 ஆண்டுகளாக நிலவிய பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இரண்டு லட்சத்து எழுபதாயிரம் பேர் வன்னிப் பகுதியில் வாக்களிக்கத் தகுதி

வவுனியா—

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக 2 லட்சத்து 70 ஆயிரம் வாக்காளர்அட்டைகள் வவுனியாவில் உள்ள வன்னி தேர்தல் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்த்தில் 14 ஆயிரத்து 884 வாக்களர்களுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது 66 ஆயிரத்தது 596வாக்காளர்களுக்குமான வாக்காளர் அட்டைகள் எழுதும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

# வீத்தடைகளை அகற்றி பொது மக்கள் சுதந்திரமாக நடமாட நடவடிக்கை எடுக்கவும்

## மன்னார் அரச அதிபரிடம் பிரஜைகள் குழு கோரிக்கை

மன்னார்—

மன்னார் நகரில் படையினர் அமைத்துள்ள வீதித் தடைகளை அகற்றி பொதுமக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கத்திடம் மண்டூர் மாவட்டப் பிரஜைகள் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மண்டூர் மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபரை நேற்று முன்தினம் சந்தித்த பிரஜைகள் குழுவின் தலைவர் எஸ்.எமியான் பிள்ளை, செயலாளர் எம். ஜெயபாலசிங்கம் ஆகியோர் கொண்ட குழுவினர் இந்தக் கோரிக்கையை மன்னார் அரசாங்க அதிபரிடம் முன்வைத்தனர்.

மண்டூர் நகரில் பொதுமக்களின் வீடுகளைப் படையினர் இரவு வேளைகளில் சோதனையிடுவதாலும், பொதுமக்களுக்குச் சொந்தமான வளாகத்துக்குள் அத்துமீறி பிரவேசிப்பதாலும் பொது மக்கள் மத்தியில் பீதி ஏற்படுவதாகவும் இந்தச் சந்திப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# மன்னாரில் படையினர் அடாவடித்தனம்; கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு

மன்னார்—

மன்னாரில் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் அடாவடித்தனங்கள் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

மக்களை அச்சுறுத்தும் வகையில் இராணுவத்தினர் மேற்கொள்ளும் சுற்றி வளைப்புகள் கடுமையான கண்டனத்திற்குரியது எனத் தெரிவித்த அவர், இவ்வாறான இராணுவத்தினரின் சுற்றி வளைப்புகள் நடை பெறும் போது தம்மிடம் தெரிவித்தால் தாம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்ததாகவும் கூறினார்.

## சேதமடைந்த நிலையில் செல்வா நகர் முன்பள்ளி

கிளிநொச்சி—

செல்வா நகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன்ஆலயத்துக்கு அருகில் இருக்கும் முன்பள்ளி மிக மோசமான நிலையில் காணப்படுகிறது. வேயப்பட்ட கிடுகுகள் பழுதடைந்தும், கூரையற்ற நிலையிலும் காணப்படுகிறது. இதனால் உள்ளகக் கட்டடமும் சேதம் அடைந்துள்ளது.

முன்பள்ளிச் சிறார்களின் கல்வி பாதிப்படைந்துள்ளதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். வசதி குறைந்த பொது நோக்கு மண்டபத்தில் தற்போது முன்பள்ளிச் சிறார்கள் கல்வி கற்று வருகின்றார்கள்.

# செல்வா நகர் நீர்த்தாங்கியில் போதிய நீர் நிரப்பப்டுவதில்லை

கிளிநொச்சி—

தற்போது கிளிநொச்சியில் நிலவும் கடும் வரட்சி காரணமாக செல்வா நகரில் 1000 லீற்றர் நீர்த் தாங்கி வைக்கப்பட்டது. செல்வா நகர் ஸ்ரீநாகதம்பிரான் ஆலயத்தில் இந்த நீர்தாங்கி வைக்கப்பட்ட போதும் ஒழுங்காக நீர் நிரப்பப்படாத காரணத்தால் இந்தப் பகுதி மக்கள் மிகுந்த மனவேதனை அடைவதோடு, குடி நீருக்காக அங்குமிங்கும் அலைந்து திரிவதை அவதானிக்க முடிகிறது. இந்தப் பகுதி மக்கள் இங்குள்ள புதுக்குளத்தில் குளிக் கிறார்கள். குறிப்பிட்ட குளமும் தற்போதைய வரட்சி காரணமாக வற்றி வருகிறது.

நீர்த்தாங்கிக்கு ஆறு அல்லது ஏழு நாட்களுக்கு ஒரு முறையே நீர் பௌசர் மூலம் கொண்டு வரப்படுகிறது. தற்போது சுமார் எட்டு நாட்களாகியும் நீர் கொண்டு வரப்படவில்லை.

இது தொடர்பாகப் பொது மக்கள் செல்வா நகர் கிராம அலுவலரிடம் முறையிட்டுள்ளார்கள். நீர் வழங்குவது கிளிநொச்சிப் பிரதேசசபையின் பொறுப்பு என்றும், பிரதேசசபையின் இரு தண்ணீர் பௌசர்களும் பழுதடைந்து இருப்பதே நீர் கொண்டு வராமைக்கான காரணம் எனவும் செல்வா நகர் கிராம அலுவலர் தெரிவித்தார்.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**செப்ரெம்பர்—18**

1791: பிரான்சின் புதிய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது.

1793: வெள்ளை மாளிகைக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோஜ்வாஷிங்டன் அடிக்கல் நாட்டினார். மிகவும் வெண்மையான ஒரு வகைச் சுண்ணாம்புக் கற்பாறையால் இது கட்டப்பட ஆரம்பிக்கப்பட்டது.

1818: சிலி தனது நாட்டில் விடுதலை அரசை அமைத்தது.

1896: ஒளியின் வேகத்தை நேரடியாக ஆய்வின் மூலம் முதன் முதல் நிர்ணயித்த பிரான்சிய விஞ்ஞானி அர்மான் ஹிப்போலைட் ஃ பிஸோ மரணமடைந்தார்.

1906: ஹொங்கொங்கில் வீசிய கடும் சூறாவளியால் 10,000 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

1924: இந்துக்கள் - முஸ்லிம்கள் ஒற்றுமைக்காக மகாத்மா காந்தி இருபத்தி ஒருநாள் உண்ணாவிரதத்தைத் தொடங்கினார்.

1934: சர்வதேச சங்கத்தில் ரஷ்யா இணைந்து கொண்டது.

1941: பிரித்தானியா சோவியத் படைகள் - ஈராக்கைக்கைப்பற்றின. ஈரான் மன்னர் ஷா முடிதுறந்து நாட்டைவிட்டுத் தப்பி ஓடினார்.

1944: சுமாத்திரா மீது விமானம் தாங்கிக் கப்பல்களிலிருந்து, விமானத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

1972: உகண்டாவில் இடி அமீன் ஆசிய நாட்டினரைப் பல வந்தமாக நாட்டை விட்டு வெளியேற்றத் தொடங்கினார். இடி அமீன்னுடைய படைவீரர்கள் ஆசிய நாட்டவரின் சொத்துகளைச் சூறையாடத் தொடங்கினர்.

1974: ஹோண்டுரஸ்ஸில் மிகக் கடுமையான சூறாவளி அடித்தது. பல்லாயிரக்கனக்கானவர்கள் இறந்தனர். பலலட்சக்கணக்கானவர்கள் வீடிழந்தனர்.

1979: ஐக்கிய நாடுகள் சபையில் செயின்ட் லூசியா 152 ஆவது உறுப்பு நாடாக இணைந்தது.

1985: மெக்ஸிக்கோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

1986: ஜெட் விமானம் ஒற்றை பம்பாயிலிருந்து, கோவாவரை முழுக்க முழுக்க பெண் ஊழியர்களே ஓட்டிச் சென்றனர்.

1987: ஐக்கிய நாடுகள் சபையின் 159 ஆவது உறுப்பு நாடாக புருணை சேர்த்துக் கொள்ளப்பட்டது.

1988: தென்கொரியாவில் சியோப் நகரில் 24 ஆவது ஒலிம்பிக் பந்தயம் ஆரம்பமாகியது. இதில் 161 நாடுகளைச் சேர்ந்த 13,674 வீரர்கள் கலந்து கொண்டனர்.

1989: இலங்கையில் இருந்து இந்திய அமைதிகாக்கும் படையைத் திருப்பி அழைத்துக் கொள்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

1995: 75 இற்கும் மேற்பட்ட படையினருடன் பறந்து கொண்டிருந்த அன்ரனோவ் விமானம், புத்தளக் கடற்பரப்பில் வெடித் துச் சிதறியது.

தொகுப்பு - சந்துரு

# புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் திலீபனின் நினைவு நாள் நிகழ்வுகள்

புதுக்குடியிருப்பு—

தியாகி லெப்.கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வு கடந்த வியாழக்கிழமை காலை புதுக்குடியிருப்பு மாவீரர் நினைவு மண்டபத்தில்- புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் தா.சண்முகநாதன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை புதுக்குடியிருப்பு வணிக கழகத் தலைவர் பிரபா ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை புதுக்குடியிருப்பு பிரதேச பொறுப்பாளர் பிறையாளன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தியாகி திலீபனின் உருவப் படத்திற்கு சுடர் ஏற்றி மலர் மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து நினைவுரைகளும் இடம் பெற்றன. (வெ)

# காணிச் செயலக செயற்பாடுகள்

கிளிநொச்சி—

கிளிநொச்சிக் கச்சேரியில் செயற்பட்டுவரும் துரித காணி செயலணி எதிர்கால நடவடிக்கையாக கண்டாவளை, வலைப்பாடு, வேரவில், புளியம் பொக்கணை, கல்மடு நகர், நாவற்குளம், அரசடி, செக்காலை, செட்டிவெளி, போன்ற இடங்களுக்குச் சென்று பிரச்சினைகளைக் கேட்டறிவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக உதவிக் காணி ஆணையாளர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

என் நாட்டிற்காக கொடுப்பதற்கு என்னிடம் ஒரேயொரு வாழ்வுதான் இருக்கிறது என்று வருத்தப்படுகிறேன். -நதன் ஹோவே.

## நமது நோக்கு

# உதவி வழங்கும் நாடுகளின் சந்திப்பும்; இலங்கைக்கான 'நிதி' உதவிகளும்!

இலங்கையின் சமகால அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் மற்றும் சமாதான முயற்சிகளின் எதிர்காலம் போன்ற பன்முகப்பட்ட பிரச்சினைகள் குறித்து ஆராயவும், இலங்கைக்கான உதவி வழங்கல் நடைமுறைகள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளவும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டுத்தலைமைகளின் மிக முக்கியமான சந்திப்பொன்று நாளையதினம் நியூயோர்க்கில் நடைபெறவுள்ளதாக அரசதரப்பு செய்திகள் கூறுகின்றன.

ஏற்கனவே ஐக்கிய தேசிய முன்னணியின் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மூன்று வருடங்களின் முன்னர் ஆட்சிப்பொறுப்பை ஏற்று - நோர்வே நாட்டின் அனுசரணையுடனும், சர்வதேச சமூகத்தின் பின் ஆதரவுடனும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்த உடன்பாட்டை ஏற்றுக்கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் நடைபெற்ற தொடர்ச்சியான அமைதிப் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் எழுந்த நம்பிக்கையைத் தொடர்ந்து நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இலங்கையின் அபிவிருத்தி மற்றும் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கென முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு பெருந்தொகை நிதியை உதவியாக வழங்க சம்பந்தப்பட்ட நாடுகள் உறுதியளித்தபோது சமாதானத்துக்கான வெகுமதியாகவே அது அடையாளப்படுத்தப்பட்டது.

அந்த நிதி கிடைத்தால் இலங்கையானது அதன் அதல பாதாளத்தை நோக்கிய பொருளாதாரப் பின்னடைவிலிருந்து மீண்டுவிடும் எனக் கனவு காணப்பட்டது.

ஆனால், அப்போது இலங்கையில் நிலவிய இரட்டை ஆட்சித தலைமைகளுக்கிடையேயான சமாதான நகர்வு குறித்த கருத தியல் முரண்நிலை, தேசிய நலனைப் புறந்தள்ளியதாக அமைந தகுடன, பேச்சுவார்த்தையை மேலும் தொடரமுடியாத முட்டுக்கட்டை நிலைமையையும் ஏற்படுத்தியது.

இந்த முட்டுக்கட்டை நிலை இலங்கைக்குக் கிடைக்கவிருந்த பெருந்தொகை நிதியுதவிகளையும் கிடைக்கமுடியாத சூழலை உருவாக்கியதுடன், சமாதானம் குறித்த நம்பிக்கைகளில் சரிவு நிலையையும் உருவாக்கியது.

விடுதலைப் புலிகள் கையளித்த இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பான உத்தேச திட்டவரைபினை நிராகரித்த ஜனாதிபதி தரப்பினர் - சட்டபூர்வ அரசியல் சதியொன்றின்மூலம் ரணில் அரசைக் கவிழ்த்ததையடுத்து, சமாதான முயற்சகள் முன்னேற்றமிழந்துபோனதுடன், மெல்ல மெல்ல அதன எதிர்காலம் கேள்விக்குறியாகிப்போய் இன்று மீண்டும் போர் மேகம் சூழும் ஆபத்து நிலையை எட்டியுள்ளது.

போர் ஏற்படுத்திய பேரழிவையடுத்து, சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படுத்திய மகா அழிவானது நாட்டை எல்லா வகையிலும் நீர்மூலம்செய்துள்ள நிலையில், அதனை மீளமைகவும் பாதிப்புக்குள்ளான தேசத்தின் பொருளாதாரக் கட்டுமானங்களைப் புனரமைக்கவும், மக்களின் வாழ்வுக்கு புத்துயிர்ப்பு ஏற்படுத்தவும் உலகம் உதவ முன்வந்தபோதும் - பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விடயத்தில் அரசு காட்டிய இனவாதப்போக்கு அந்த வாய்ப்பையும் சாத்தியமற்றதாக்கியுள்ள நிலையில் - நாடு ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளவேண்டிய அவலமும் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான நிதியை ஒதுக்குவதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுவரும் அரசு, நாளைய தினம் நியூயோர்க்கில் நடைபெறவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் கூட்டுத்தலைமைகளின் சந்திப்பினை ஆவலுடன் எதிர்கொள்ளும் நிலையிலேயே உள்ளது.

2003 - ஜூலையில் நடைபெற்ற ரோக்கியோ உச்சி மாநாடு சமாதான முன்னெடுப்புக்களின் முன்னேற்ற அடிப்படையில் இலங்கைக்கு வழங்க உறுதியளித்த 45 ஆயிரம் கோடி ரூபா குறித்து உதவி வழங்கும் நாடுகள் புதிதாக எந்த முடிவையும் எடுக்குமா என்ற எதிர்பார்ப்பு அரசுக்கு இருக்கலாம்.

ஆனாலும், சமாதான முன்னெடுப்புக்கள் குறித்த எந்த விதமான உத்தரவாதத்தையும் கொடுக்க முடியாத நிலையில் இருக்கும் ஜனாதிபதியையும், பிரதமரையும் நம்ப சர்வதேச சமூகம் தயாரில்லை என்பதையும் கருத்தில் கொள்வதும் அவசியமேயாகும்.

உதவி வழங்கும் நாடுகளின் அனுசரணையும், ஆதரவுமின்றி ஆட்சியைத் தொடர்ந்து நடத்தும் பொருளாதார வலிமையற்ற இலங்கை அரசானது, தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள வேண்டிய நிலையில், உதவி வழங்கும் நாடுகளுக்கு சமாதான முயற்சிகளின் எதிர்கால முன்னேற்றம் குறித்து எந்தவிதமான உத்தரவாதத்தையும் வழங்கும் நிலையில் இல்லை என்ற சமகால அரசியல் யதார்த்தம் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளாத ஒன்றல்ல...

இலங்கையின் வரவு - செலவுத்திட்ட மானியங்களின் ஒதுக்கீட்டுத் தொகை எல்லை மீறிவிட்டதால் அவற்றை வெட்டிக் குறைப்பதற்கு அரசு உடன் நடவடிக்கை எடுக்காவிடின் நிலைமை மிக மோசமாகிவிடும் என அரசை - சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ள சூழலில் இந்தச் சந்திப்பு நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது.

சமாதான முயற்சிகளுக்கும் நோர்வேயின் அனுசரணைப் பணிகளுக்கும் எதிராக தென்பகுதி பேரினவாத அரசியல் தலைமைகள் அணி திரண்டுள்ள நிலையில், எதிர்கால அமைதி முயற்சிகள் தொடர்பான அரசின் பேச்சளவிலான உத்தரவாதங்களை நம்ப சர்வதேச சமூகம் இன்னமும் தயாராக இருந்தால் மட்டுமே நியூயோர்க் சந்திப்பில் அரசுக்குச் சாதகமான முடிவுகளை எடுக்கும்.

அப்படி எடுக்கப்படும் அரசுக்கு சார்பான உதவி குறித்த முடிவுகள் சமாதானத்தைப் பாதுகாக்க, முன்னெடுக்க, உறுதிப்படுத்த உதவும் என எவரும் நம்பினால் அது அவர்களின் பட்டறிவுக் குறைபாட்டையே அடையாளப்படுத்தும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com



விடுதலைப் புலிகள் வாழவேண்டுமென்றோ, ஆழ வேண்டுமென்றோ ஆசை கொள்ளவில்லை. எமது மக்களின் நிரந்தரமான, சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால், அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்.

*- தியாக தீபம் லெப்.கேணல் திலீபன்-*

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி' யார் பார்வையில்...

# கட்சிக் கொள்கையைக் காட்டி அநுராவுக்கு போட்டியிட வாய்ப்பு

மஹிந்த அடுத்த ஜனாதிபதியாவது கேள்விக்குறிதான் என்று சொன்னபடியே வந்தார் நண்பர் பரமசிவம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை நிலைப்பாட்டை உறுதிப்படுத்துபவருக்கே ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு நியமனம் வழங்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா அமெரிக்காவில் நின்றே உறுதிபடத் தெரிவித்துவிட்டாரேயென்பதால் இப்படிச் சொல்லுகிறீரா? என்று கேட்டேன்.

ஜே.வி.பியுடன் மஹிந்த உடன்படிக்கை செய்தவுடனேயே மஹிந்தவுக்கு சுதந்திரக் கட்சி வேட்பாளர் நியமனம் வழங்குமா என்ற சந்தேகம் எழுப்பியிருந்தீர். இப்பொழுது ஹெல உறுமயவுடனும் அவர் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தார். இர்ண்டு ஒப்பந்தங்களும் இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்புக்குள்ளேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்று சொல்கிறது.

அதிகாரப் பரவலாக்கல் என்ற பேச்சுக்கே இடமில்லையென்றும் தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை பற்றியெல்லாம் தமிழர் மூச்சுவிடக்கூடாது. விடுதலைப் புலிகளுடன் பேசுவதென்றாலும் ஆயுதக் களைவுக்குப்பின் இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு பற்றியே பேசவேண்டுமென்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிபந்தனைகளை மஹிந்த ஏற்றுக்கொண்டிருக்கிறார். இது மட்டுமல்ல தமிழர் தாயகமான வடக்கு-கிழக்குப் பகுதியில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களுக்கு வெளிநாடுகள் அளித்த உதவியைப் பகிர்ந்தளிக்க அமைக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பைக் கலைத்துவிட வேண்டுமென்ற நிபந்தனையையும் மஹிந்த ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

பொதுக்கட்டமைப்பை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தவரே பிரதமர் மஹிந்ததான். அமைச்சரவையும் இதை ஏற்றுக்கொண்டது. இந்த நிலையில் இதைக் கலைப்பதற்கு மஹிந்த ஒப்புக்கொண்டிருப்பதை சுதந்திரக் கட்சி ஏற்றுக்கொள்ளுமா? சந்திரிகா அம்மையாரோடு கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைத்து அவரையே அவமதிக்கக்கூடிய முறையில் நடந்து, பின் தாக்குப்பிடிக்க முடியாமல் வெளியேறிய ஜே.வி.பி. - மஹிந்தவைத் தனது கைக்குள் போட்டு, அம்மாவிடம் சாதிக்க முடியாதவற்றை மஹிந்தவைக் கொண்டு சாதிக்க நினைத்தால், அம்மா சும்மா இருப்பாரா? தம்பிதான் பார்த்துக்கொண்டு நிற்பாரா? சுதந்திரக் கட்சியும் விட்டுக் கொடுக்குமா? என்று பரமசிவம் கேட்டார்.

ஜே.வி.பியுடனும், ஹெல உறுமயவுடனும் மஹிந்த ஒப்பந்தம் செய்துகொண்டபின் அம்மையார் இப்பொழுது கடுமையாக நிற்கிறார். அநுராவும் சிலசமயம் அக்காவுடன் சேர்ந்து கடுமையாக இருக்கிறமாதிரியும் சிலசமயம் வளைந்து போகிற மாதிரியும் பேசுகிறார். அமைச்சர்கள் சிலரும்கூட மஹிந்தவுக்கும், அம்மையாருக்கும் எந்தப் பிரச்சினையுமில்லை.

மஹிந்தவின் வெற்றிக்கு அம்மா உழைக்கிறார் என்றும் சொல்கிறார்கள். சுதந்திரக் கட்சியின் கொள்கைக்கு விரோதமாக மஹிந்த ஒப்பந்தம் செய்திருக்கிறார். இதை எப்படி அம்மா ஏற்றுக்கொள்வார். சுதந்திரக் கட்சியின் கொள்கையில் நின்றால்தான் மஹிந்தவுக்கு வேட்பாளர் நியமனம் கிடைக்குமென்று அம்மா சொல்லிவிட்டாரே! மஹிந்த இனி என்ன செய்வார்? என்று நான் சொன்னேன்.

ஜே.வி.பி. 12 நிபந்தனைகள் போட்டு ஜனாதிபதியாக்குவதாக உறுதியளித்து உடன்படிக்கையில் கையெழுத்துப் போடச் சொல்லி மஹிந்தவிடம் நீட்டியபோது அவர் அதை ஏற்றுக் கையெழுத்துப் போட்டார். இதன்பின் 11 நிபந்தனைகள் போட்டு ஜாதிக ஹெல உறுமய ஆதரிப்பதாகச் சொல்லி ஒப்பந்தப் பத்திரத்தை தலதா மாளிகையின் முன் வைத்து நீட்டியது.

இதையும் பயபக்தியுடன் வாங்கி மஹிந்த கையெழுத்துப் போட்டுக்கொடுத்தார். இப்பொழுது சந்திரிகா அம்மையாரும் சுதந்திரக் கட்சிக் கொள்கையை ஏற்றுச் செயற்படுவேன் என்று பத்திரத்தை நீட்டிக் கையெழுத்துப் போடச் சொன்னால், அதிலும் மஹிந்த கையெழுத்துப் போடுவார் என்று பரமசிவம் சொன்னார்.

அதாவது, ஒப்பந்தங்களிலும் பத்திரங்களிலும் சுந்திரக் கட்சியினர் பண்டாரநாயக்க காலத்திலிருந்து கையெழுத்துப் போடுவதற்குத் தயங்கியதில்லை. அவை நிறைவேற்றப்படுவதென்றால்தானே கவலைப்படவேண்டும். நிறைவேற்றப்படாத, நிறைவேறாத ஒப்பந்தங்களிலும் உடன்படிக்கைகளிலும் துணிந்து கையொப்பமிடலாம் என்று நான் சொன்னேன்.

மறந்து போனேன். அன்றைக்கே நீர் பேசும்போது மஹிந்த இப்படி ஒப்பந்தங்கள் செய்துகொண்டு போனால், பண்டாரநாயக்க குடும்ப வாரிசு அனுரா பண்டாரநாயக்கதான் சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராவார் என்று சொல்லியிருந்தீர். அப்படித்தான் நடக்கும்போல் தோன்றுகிறது என்றார் பரமசிவம்.

நான்தான் அடுத்த ஜனாதிபதி. பண்டாரநாயக்கவின் குடும்பவாரிசுதான் அடுத்த ஜனாதிபதி என்று முன்பே அனுரா சொன்னது ஞாபகம் வருகிறதா என்று கேட்டேன்.

இப்படி நடக்கவேண்டுமென்றுதான் மஹிந்தவை நீளக்கயிற்றில் விட்டுப் பிடித்தாரோ சந்திரிகா என்று சொன்னபடியே நடந்தார் பரமசிவம்.

# யாழ்.நகரச் சுற்றாடலை பாதுகாப்பது யார்...?



யாழ்ப்பாணம் என்று சொல்லும் போது அதற்கெனத் தனி மரியாதை உண்டு. யாழ்ப்பாணக் கலாசாரமே உலகிலுள்ள பெரும்பாலான தமிழ்ப் பிரதேசங்களில் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால், கவலைக்குரிய விடயம் என்னவென்றால் அன்றைய யாழ்.சமுகத்துக்கும், இன்றிருக்கும் யாழ்.சமுகத்துக்கும்,இடையே நிறைய மாற்றங்களை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஆயினும், தற்போதைய மாற்றங்கள்எமது சமுகத்தைப்பின்னடையச் செய்வனவாகவே அமைகிறது.

இதற்குப் பல காரணங்களைக் கூறமுடியும். அதாவது- யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி கொழும்பு வாழ் தமிழ் மக்களின் வருகையுடன் கொழும்பு நகரக் கலாசார, நடையுடை, பாவனைகளும் சேர்ந்து வருகின்றமை மக்களின் ஆடம்பர வாழ்க்கை போன்வற்றை முக்கியமாக குறிப்பிடலாம். இந்த மாற்றங்களால் யாழ். மக்களுக்கென்று போற்றப்பட்டு, பேணிப்பாதுகாக்கப்பட்டுவந்த நாகரிகம் சிதறடிக்கப்படுகிறது. கொழும்பிலிருந்து இங்கு வருகைதருவோர் கொழும்பு நகரைப்போன்றே யாழ்ப்பாணத்தையும் நினைத்து நடையுடை, பாவனைகளில் நடந்து கொள்கிறார்கள். இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், தாங்களும் யாழ்.சமுகத்தவர்தான். எம்முடைய கலாசாரமும் இதுதான். நாம் இதைத்தான் பின்பற்ற வேண்டும் என்பதை எள்ளளவேனும் நினைக்க மறந்து விடுகிறார்கள் என்பதேயாகும். இதைப் பார்க்கும் யாழ். மக்களும், தாங்களும் இவ்வாறு உடையணிந்து - தாம்தான் நவநாகரிகமானவர்கள் என்ற எண்ணத்தைத்தம் மனதில் நினைத்து, மறைமுகமாக சமுகச் சீர்கேட்டுக்கு வழிவகுக்கிறார்கள் என்பதுதான் வேதனைக்குரியதாகும்.

நவீன உலகுக்கு அமைவாக யாழ். நகரமும் மாற்றமடைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதாவது தொழிற்சாலைகளின் அதிகரிப்பு, வாகனப் போக்குவரத்து நெரிசல் போன்ற பல மாற்றங்களைக் குறிப்பிடமுடியும். இவ்வாறான மாற்றங்களால் சாதகவிளைவுகள் காணப்பட்டாலும், பாதகமான விளைவுகளும் இருக்கத்தான் செய்கிறன.

பாதக விளைவுகள் எனப்படும் போது தொழிற்சாலைக் கழிவுகள், போக்குவரத்து நெரிசல் போன்றவற்றாலும் கண்ட கண்ட இடங்களில் கழிவுகளைக் கொட்டுவதாலும் சுற்றாடல் மாசடையக் கூடிய பாதகநிலை தோன்றியுள்ளது. இவற்றைத் தடுக்க உடனடியாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அன்றேல் எமது யாழ்.சமுகம் பாரிய பின்விளைவுகளைச் சந்திக்கவேண்டிய துன்பியல் நிலை தோன்றும்.

யாழ்.நகரச் சுற்றாடலானது நாளுக்குநாள் மாசடைந்து கொண்டு செல்கிறது. காணும் இடங்களிலெல்லாம் குப்பைகள், கழிவுகள் காணப்படுகின்றன. இந்தக் கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு, நோய்கள் தோன்றும் வாய்ப்புக்கள் அதிகமாகின்றது.

தற்போது யாழ்.நகரத்தின் தொழிற்சாலைக் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படுவதில்லை. உதாரணமாக - யாழ். மணிக்கூட்டு வீதிப்பகுதியில் அமைந்துள்ள ஒட்டுத் தொழிற்சாலைகளின் இரும்புக் கழிவுகள் அந்தந்த தொழிற்சாலைகளின் முன்னாலேயே குவிந்துகிடப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. இதன் காரணமாக அந்த வீதியால் பயணம் செய்யும் பாதசாரிகளும், வாகனங்களும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதைச் சீர்செய்ய வேண்டுமாயின் அந்த வீதியில் உள்ள கழிவுகள் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

இவ்வாறே யாழ்.ஆஸ்பத்திரி வீதிப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் - தங்கள் வர்த்தக நிலையங்களிலிருந்து அன்றாடம் வெளியேற்றும் கழிவுகளை வீதியில் வீசுவதும், கழிவு நீர் வழிந்தோடும் வாய்க்கால்களுக்குள் போடுவதுமான பொறுப்பற்ற செயலைச் செய்கிறார்கள். இதனால் கழிவு நீர் வழிந்தோடும் வாய்க்கால் குப்பைகளால் நிரம்பி வழிகிறது. இதன் காரணமாக கழிவு நீர், குப்பைகள் இரண்டும் வாய்க்கால்களுக்குள்ளேயே தேங்கிநின்று, துர்நாற்றம் வீசுகிறது. இதனை அந்தப் பகுதி வர்த்தகர்களும்சரி, மாநகர சபையின் கழிவகற்றும் பிரிவினரும் சரி கவனத்திலெடுப்பதாகத் தெரியவில்லை. இதனால் சுகாதாரச் சீர்கேடு, நோய்கள் என்பன ஏற்பட இடமுண்டு. இதுதவிர அவ்வீதியிலேயே காணப்படும் பழக்கடைகளின் உரிமையாளர்களும் அழுகிய பழங்களை இவ்வாறுதான் வீசியெறிகின்றார்கள். இதனாலும் துர்நாற்றம், கிருமிகள் என்பன அதிகரிக்கக் காரணமாக அமைந்துவிடுகிறது.

இதுதவிர யாழ்.நகரில் என்றுமில்லாதவாறு தற்போது பொலித்தீன் பாவனை அதிகரித்துள்ளது. மக்கள் பொருட்களைக் காவிச் செல்வதற்கு இலகுவான பொருளாக 'சொப்பிங் பாக்'கைக் கருதி எந்தச் சிறிய பொருளை எடுத்துச் செல்வதானாலும் சொப்பிங் பாக்கைப் பாவிப்பது மட்டு மல்லாமல், இவற்றைக் கண்ட கண்ட இடங்களில் வீசியெறிந்து விடுகிறார்கள். இது உக்கும்திறன் அற்றது. அது காலாகாலமாக நிலத்துக்குள் புதையுண்டு நிலத்தை மாசடையச் செய்கிறது. இதனை நீக்க, பொலித்தீன் பாவனையைத் தடைசெய்ய வேண்டும். இது உடனடியாக இயலாத காரியமாக இருந்தாலும், பொலித்தீனை மீள் பாவனைக்கு உட்படுத்துவதன் மூலம் குறிப்பிட்ட காலத்துக்குள் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடைசெய்ய முடியும். மேற்கத்தேய நாடுகள் பலவற்றில் பொலித்தீன் தடை அமுலில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

வாகனப் போக்குவரத்து என்றுமில்லாதவாறு தற்போது யாழ்.நகரில் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனாலும் சுற்றாடல் பாதிக்கப்படும் அபாயம் அதிகரித்து வருகிறது. அதாவது வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை, வாகன இரைச்சல், ஹோன் சத்தம் என்பன மக்களின் இருதயம் சம்பந்தமான நோய்களுக்குக் காரணமாக அமைகிறது. அதிக இரைச்சல் உள்ள வாகனங்களைத் தடைசெய்தல், அதிக புகை வெளியேற்றும் வாகனங்களைத் தடைசெய்தல், அதிக ஒலியெழுப்பும் ஹோன்களைத் தடைசெய்தல் என்பவற்றால் இவற்றுக்கு ஓரளவேனும் தீர்வு காணமுடியும்.

இவ்வாறான நிலை தொடர்ந்தால் பாதிக்கப்படப்போவது எமது மக்கள்தான் என்பதை நாம் அனைவரும் கருத்தில்கொண்டு, அவற்றைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

யாழ்.மாநகரசபையின் கழிவகற்றும் பிரிவினர் யாழ். நகரில் திருப்திகரமாகச் செயற்படவில்லை என்று மக்களால் குறை கூறப்படுவது யாவரும் அறிந்த விடயமாகும். அவர்களும் ஏனோ தானோ என்று செயற்படுவது மிகுந்த வேனைக்குரிய செயற்பாடாகும். தங்களால் உரிய முறையில் கழிவகற்றல் செயற்பாடு மேற்கொள்ளப்படாமைக்கு வசதிக்குறைவையே, அதாவது இயந்திர வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான நிதிப்பற்றாக் குறை, தொழிலாளர் பற்றாக்குறை என்பவற்றையே காரணங்களாகக் குறிப்பிடுகின்றனர். இதுதவிர ஒரு வீட்டின் முன்னாலுள்ள கழிவுகளை அகற்றுவதற்கு வீட்டின் உரிமையாளர் சுத்திகரிப்பு தொழிலாளர்களின் தயவுக்கு காத்திருக்கவேண்டும். அன்றேல் பாரிய சிரமத்தின் மத்தியிலேயே இவ்வாறான கழிவுகள் அகற்றப்படும். அதாவது அவர்களை அனுசரித்துப் போனால் மட்டுமே குப்பைகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். இல்லாவிட்டால் நான்கைந்து நாட்களின் பின்னரே இவை அகற்றப்படும். இவற்றால் பாதிக்கப்படப்போவது வறுமைப்பட்ட மக்கள்தான் என்பதை உரிய அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இன்று பல அரசசார்பற்ற நிறுவனங்கள், அரச திணைக்களங்கள் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை யாழ்.நகரில் மேற்கொள்கின்றன. புதிது புதிதாகப் பல கட்டிடங்கள் அமைக்கப்படுகின்றன. புதிய ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன. இன்னும் பல்வேறுபட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் திட்டங்களை வகுத்துக் கொண்டுதான் இருக்கிறன. இவ்வாறு பல அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், சுற்றாடல் பாதுகாப்புப்பற்றி எவருமே கண்டுகொள்ளாதது ஏன்? நகரில் ஏற்கனவே தமது அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் யாழ்.மாநகரசபைப் பகுதியினர் தொடர்புகொண்டு திட்டங்கள் எதுவுமே தீட்டப்படாதது ஏன்? முதலில் கவனிக்கப்பட வேண்டிய யாழ்.நகரின் துப்புரவு, சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றை விடுத்து வேறுவகையான அபிவிருத்தி நடவடிக்கைகளில் பெரிதும் கவனம் செலுத்தப்படுவது ஏன்? இவை அனைத்தும் யாழ்.நகர்ப்புறமக்களுக்குப் புரியாத புதிராகக் காணப்படுகிறது. அந்த விடயத்தில் புத்திஜீவிகளுடைய பதிலும் மௌனமாகவே இருக்கிறது.

எது எவ்வாறு இருப்பினும் இது எமது நகரம். நாம்தான் இதைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொருவருடைய மனங்களிலும் ஆழப்பதிய வேண்டும். இவ்வாறு மனவுறுதியுடன் செயற்பட்டால் சுற்றாடல் பாதுகாப்பு என்பது ஒரு பெரியவிடயமல்ல. ஆகவே அரச, அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகள், தனியார், பொதுச் சமுகத்தவர் என் ஒட்டு மொத்தத்தில் அனைவருமே சுற்றாடலைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**திருமால் திருசாந**
**(அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்)**

# யாழ்.மாநகர சபையின் சித்த மருத்துவ சேவை

சித்தமருத்துவம் அன்று சித்தர்களால் உருவாக்கப்பட்டது. இன்று அறிவுமிக்க சான்றோர்களால் கைக்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் பலவகைப்பட்ட வைத்தியர்கள் உருவாகியுள்ளனர். பல்கலைக்கழக பட்டதாரிகள், பட்டப்படிப்பு பட்டதாரிகள், பரம்பரை வைத்தியர்கள் என உண்டு. அதேபோன்று வைத்தியசாலைகளும் அரசாங்கத்தின் நேரடிக்கண்காணிப்பில் போதனாவைத்தியசாலையும், மாகாணசபையின் கீழ் மாகாண வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள் மற்றும் மத்திய ஆயுர்வேத மருந்தகங்களும், உள்ளூராட்சி சபையின் கீழ் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளும், இயங்கி வருகின்றன. இவையாவும் ஆயுர்வேத திணைக்களம், சுதேச வைத்தியத்துறை அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றன..

உள்ளூராட்சி சபைகளின் கீழ் வட.கிழக்கு மாகாணத்தில் 50இற்கும் மேற்பட்ட இலவச சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகள் சேவை புரிந்து வருகின்றன. இதனை எமது யாழ். மாநகரசபையானது மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

யாழ்.மாநகரசபை பல தரப்பட்ட பல்வேறு சிறந்த பணிகளைச் செய்வதுடன், சித்த மருத்துவ சேவையையும், இலவசமாக மக்களுக்கு வழங்கி வருகிறது. சித்த மருத்துவத்தை சிறப்புற மேலோங்கச் செய்வதற்கு மூலிகை வளர்ப்பு மருந்துகள் தயாரிப்பு எனப் பல வழிகளிலும் மாநகரசபையின் பணிகுறிப்பிட்டுச் சொல்லக்கூடியதொன்றாகும்.

**சித்த மருத்துவப் பகுதி**

யாழ்.மாநகரசபையின் சித்த மருத்துவப் பகுதி 1953ஆம் ஆண்டு டொக்டர் கனகரட்ணம் என்பவரால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. அன்று ஒரு சில உதவியாளர்களுடன் மட்டுமே அவர் கடமை புரிந்தார். அன்று தொடக்கம் இன்று வரை மாநகரசபை தன் சேவையை மேம்படுத்திக்கொண்டே போகிறது. இன்று பண்டாரமாளிகை வளவில் தனக்கென ஒரு பகுதியில் இயங்குகிறது. 02 வைத்தியர், ஒரு சில உதவியாளர்களுடன் இயங்கிய பகுதி - இன்று பிரதம வைத்திய அதிகாரி உட்பட, 10 வைத்திய அதிகாரிகள் கொண்ட 09 கிளை வைத்தியசாலைகளும், மருந்துசெய் நிலையம், மூலிகைத் தோட்டம் இவற்றை நடைமுறைப் படுத்துவதற்கென தலைமை அலுவலகம் என்பவற்றை தேவையான பணியாளர்களுடன் உருவாக்கி தனது சேவையை ஆற்றிவருகிறது.

மாநகரசபையின் எல்லைக்குள் வாழும் மக்கள் யாவரும் வைத்திய சேவை பெற்று, ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்பதற்காக யாழ்.மாநகரசபை எல்லைக்குள், வட்டார ரீதியாக சித்த ஆயுர்வேத நிலையங்கள் அமைக்கப்பட்டு, மக்களுக்கு எமது சேவை திறம்பட நடைபெற்று வருகிறது.

**எமது வைத்தியசாலைகள் இயங்கும் இடங்கள்**

1. நல்லூர்-தலைமை அலுவலகத்துடன்
2. நகரம்- நவீன சந்தை மேல்மாடி
3. நீராவியடி - கடைச்சாமி கோவிலடி
4. அரியாலை- ஆனந்தன் வடலி வீதி
5. குருநகர் - பாங்ஷால் வீதி
6. நாவாந்துறை- நாவலர் வீதி (எம்.ஓ.ஏச்)
7. கொழும்புத்துறை- சுவாமியார் வீதி(எம்.ஓ.ஏச்)
8. கொய்யாத்தோட்டம்-பாசையூர் (எம்.ஓ.ஏச்)
9. நாச்சிமார் கோவிலடி- கே.கே.எஸ்.வீதி (எம்.ஓ.ஏச்)

இந்தச் சிகிச்சை நிலையங்கள் காலை 8.30 மணிக்குத்திறந்து, மாலை 3.30 மணிக்கு மூடப்படுகிறது. வாரத்தில் ஞாயிறு, அரச விடுமுறை தவிர்ந்த நாட்களில் மக்களுக்காகத் தனது சேவையை ஆற்றிவருகிறது.

**மருந்து செய் நிலையம்**

மாநகரசபையின் கீழ் இயங்கும் மருந்து செய்நிலையம் சித்த வைத்தியசாலைகளுக்கு அன்று தொடக்கம் இன்றுவரை குறிப்பிட்ட அளவு சித்த மருந்துகளைத் தயாரித்து வழங்கி வருகிறது. ஆரம்பத்தில் சில வகையான மருந்துகளில் தொடங்கி, இன்று 80இற்கும் மேலான மருந்துகளைச் செய்து வருகிறது. அவையாவன- சூரணம், குளிகை, லேகியம், குழம்பு, எண்ணெய், களிம்பு, பற்பொடி எனப் பலவகை. மருந்துகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. இவையாவும் ஒரு சில தொழிலாளிகளின் உதவியுடன் தயாரிக்கப்படுகிறது. இங்கு செய்யப்படும் மருந்துகள் மாநகரசபை மக்களின் நன்மதிப்பைப் பெற்றவையாகும். இங்கு மட்டுமல்ல, இதனைநாடி தீவகம், வடமராட்சி, கைதடி, நாவற்குழி போன்ற இடங்களில் இருந்தும் வருகை தருகின்றனர். இங்கு தயாரிக்கப்படும் குழந்தைகளுக்கான கிரந்தி எண்ணெய், கோரோசனை, சர்க்கரை வியாதிக்கான மதுமேகச்சூரணம் மற்றும் நாசிரோகத்தைலம், மூலரோகக்களிம்பு, பித்த சமண லேகியம் போன்ற மருந்துகள் பல வைத்தியர்களினது நன்மதிப்பைப் பெற்றவையாகும். எனவே, சித்த மருந்துகள் பெருமளவில் செய்யப்படவேண்டும் என்பதற்காக மருந்து செய் நிலையத்தை விரிவுபடுத்த முயற்சிக்கிறோம்.

**மூலிகைத்தோட்டம்**

சித்த மருத்துவப்பகுதியின் ஒரு பகுதியில் (பண்டார மாளிகை வளவில்) மூலிகைத்தோட்டம் அமைத்து, மூலிகைகளை உருவாக்கிப் பேணப்பட்டு வந்தபோது இடம்பெயர்வு காரணமாக பல அழிந்தும், நலிந்தும் விட்டன. தற்போது இதனை சிறப்புற உருவாக்க முயன்று கொண்டிருக்கிறோம். இருந்தும் இனங்காணும் வகையில் குறிப்பிட்ட மூலிகைகள் பேணப் பட்டு வருகிறது. இதனைக் கைதடி ஆயுர்வேதக் கல்லூரி மாணவர்கள், லங்கா ஆயுர்வேத கல்லூரி மாணவர்கள் வந்து பார்வையிட்டுச் செல்வதும் குறிப்பிடத்தக்க தொன்றாகும். மேலும் அரிய மூலிகைகளை இனங்காணும் நோக்குடன் முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறோம். அத்துடன் இலகுவில் கிடைக்கக் கூடிய மூலிகைகளை அதிகளவில் உண்டாக்கி, மருந்து தயாரிப் பதற்குப் பயன்படுத்துவதுடன் மேலும் விருத்திசெய்யவும் முயற்சி செய்கிறோம். ஆளணி குறைபாட்டால் மூலிகைத் தோட்டத்தை சீராகப் பராமரித்துக்கொள்ள இயலாதநிலை இருந்தும், முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மருந்து விநியோகம்**

ஒன்பது வைத்தியசாலைகளுக்கும் தேவையான மருந்துகளை எமது மருந்து செய் நிலையத்தில் இருந்தும், நாவின்ன அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தில் இருந்தும், தலைமை அலுவலகத்துக்கு எடுத்து, மாதாந்தம் நோயாளர் வருகைக்கேற்ப மருந்துகள் விநியோகம் செய்யப்படுகிறது. இதற்கான நிதி உதவியை சுதேச வைத்தியத்துறை அமைச்சும், யாழ்.மாநகரசபையும் வழங்குகிறது. மாநகரசபையில் தயாரிக்கப்படும் சித்த மருந்துகள் சிறந்ததாகவும், தரமானதாகவும், விரும்பத்தக்கனவாகவும் இருப்பதால் நல்ல பலனை அளிப்பதாலும் அதனை அதிகளவில் தயாரிக்க வேண்டியிருப்பதால் இந்த வருடம் ஆறு லட்சம் ரூபா மாநகரசபையால் வழங்கப்பட்டிருக்கிறது. மாநகரசபை வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் நிமித்தம், 2005ஆம் ஆண்டுக்கான அரச நன்கொடை மருந்தும் பத்துஇலட்சம் ரூபா பெறுமதியாக அதிகரித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத் தில் அதிகளவு நன்கொடையைப்பெற்ற இடம் யாழ்.மாநகரசபை என மருந்துக் கூட்டுத்தாபன விற்பனை நிலைய தலைவர் கூறியமை பெருமைக்குரிய விடயமாகும்.

**நடைமுறைக்கு எதிர்காலத்திட்டங்கள்**

1. விரண சிகிச்சைப் பிரிவை நடைமுறைப்படுத்தல். அத்துடன் சீன வைத்தியம் பஞ்சகர்ம சிகிச்சையை மேற்கொள்ளல்.
2. பயன்பாட்டிலுள்ள மூலிகைகளைத் தோட்டத்தில் உண் டாக்கி விரிவுபடுத்தல்.
3. மருந்து உற்பத்தி நிலையத்தை விரிவுபடுத்தி, பிரதேச சபைகளுக்கு மருந்து விநியோகம் செய்தல்.
4. மாநகரசபையில் தயாரிக்கும் மருந்துகளை பொதுமக்கள் நேரடியாகப் பெற்றுக்கொள்ள வசதியாக விற்பனை நிலையம் ஒன்றை அமைத்தல்.
5. உள்ளக நோயாளர் சிகிச்சை பெற்றுக்கொள்ள வசதியாக கிராமிய வைத்தியசாலையை அமைத்தல்.

மாநகர சித்த வைத்தியசாலைகள் யாழ்.மக்கள் பயனடையும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் மட்டுமல்ல தூர இடங்களில் வசிப்போரும் பயனாளிகளாக இருப்பது மாநகரசபை சித்த வைத்தியப் பிரிவுக்குப் பெருமை சேர்ப்பதாக அமைகிறது. யாவுக்கும் எமது வைத்திய அதிகாரிகள், மருந்தாளர்கள், தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்கள் தன்னலமற்ற சேவை மனப்பாண்மையுடன் கூடிய உழைப்பே காரணமாகும்.

**சித்தமருத்துவ பகுதியினர், யாழ்.மாநகரசபை.**

# ஈராக்கில் நடந்த குண்டுத் தாக்குதலில்
# 30 பேர் பலி; 25 இற்கும் மேல் காயம்!



பாக்தாத் —

ஈராக்கில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதல் உட்பட பல்வேறு தாக்குதல்களில் படையினர், அரசாங்க அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் கிளர்ச்சிவாதிகளென 30 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 25 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று ஈராக்கின் மத்திய பகுதியிலுள்ள ஷியா முஸ்லிம்களின் ரசூல் அல் அசாம் பள்ளி வாசலில் தொழுகையை முடித்துக்கொண்டு வெளியேறியவர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தற் கொலைத் தாக்குதலில் பத்துப்பேர் கொல்லப்பட்டதுடன் 25 பேருக்கு மேல் காயமடைந்தனர்.

தாம் உயிரிழந்த 10 சடலங்களைப் பொறுப் பேற்றதுடன் காயமடைந்த 25 பேரையும் வைத்திய சாலையில் அனுமதித்துள்ளதாகவும், மத்திய ஈராக்கிலுள்ள பொது வைத்தியசாலையின் வைத்தியர் ஹூசைன் அலி ஹசன் தெரிவித்தார்.

சதார் நகரிலுள்ள இமாம் பள்ளி வாசலின் ஷியா மதகுரு ஷேக் பதீல் அல் - லமி கிளர்ச்சிவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரைவிட நகர சபையின் அலுவலர் மொகமட் அல் - கபாஜி மற்றும் அவரது நான்கு மெய்ப் பாதுகாவலர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ஹஸ்வா நகரில் இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்பில் மூன்று பொலிஸார் கொல்லப்பட்டனர். றமாடி நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் அமெரிக்கப் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார்.




இதேவேளை, பாக்தாத்தின் வட மேற்குப் பகுதியிலுள்ள கரபிலா நகரில் கைவிடப்பட்ட பாடசாலை ஒன்றை அல் - கொய்டா கிளர்ச்சிவாதிகள் பயன்படுத்தி வருவதை, தமது விமானப்படையினர் கண்டுபிடித்து தாக்குதல் நடத்தியதில் 9 கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

தமது படைகள் கிளர்ச்சிவாதிகளின் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துவதற்கான வல்லமையை இதுவரை பெறவில்லையெனவும், அவர்களுக்கு மேலதிக பயிற்சிகள் வழங்குவதன்மூலமும், முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்துவதன் மூலமும் தாக்குதல்களைத் தடுக்கமுடியுமென, ஈராக் ஜனாதிபதி ஜலால் தலபானி பி.பி.ஸிக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார்.

# கத்ரீனாவால் பாதிக்கப்பட்ட போதிலும் பொருட்களுக்கான வரி அதிகரிக்காது!
## ஜனாதிபதி புஷ் தெரிவிப்பு




வொஷிங்ரன்

கத்ரீனா சூறாவளியால் பாதிக்கப்பட்டபோதிலும் அமெரிக்காவில் பொருட்களுக்கான வரிகள் எவையும் அதிகரிக்க படமாட்டாதென ஜனாதிபதி புஷ் உறுதியளித்துள்ளார்.

கத்ரீனாவால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான மீள் புனரமைப்புப் பணிகளுக்கு 200 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட வேண்டியுள்ளதாகவும், இந்தத் தொகை அமெரிக்காவின் பிற பகுதிகளின் அபிவிருத்தி நிதியிலிருந்து ஒதுக்கப்படவுள்ளதாகவும் வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கத்ரீனாவால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட மீட்புப் பணிகள் போதுமானதாக இல்லையென்பதனை ஜனாதிபதி ஷ் ஏற்றுக்கொண்டுள்ளார். கத்ரீனாவால் ஏற்பட்ட சேதங்களையடுத்து மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்புப் பணிகள் மூலம் அங்கு வறுமை மற்றும் சமத்துவமின்மை என்பன நீக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நியூ ஓர்லியன்ஸில் இடம்பெற்ற உயிரிழப்புகள் 792 என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட 40 வீதமான பிரதேசங்களில் வெள்ளம் வடியவில்லை எனவும் வடிகால்கள் செப்பனிடப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த பத்து தினங்களுக்குள் இரண்டு லட்சம் மக்கள் மீள குடியேற அனுமதிக்கப்படவுள்ளனர். எனினும், இவர்கள் நீர் மற்றும் உணவு விநியோகங்களில் பெருமளவு சிக்கல்களை எதிர்கொள்ளலாமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் 7000 படையினர் இப்பகுதிக்கு மீட்பு பணிகளுக்கு அனுப்பப்பட்டனர். இவர்களில் 4500 படையினர் அப்பகுதியிலிருந்து விலக்கப்படவுள்ளதாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் பிறைன் வைட்மன் தெரிவித்தார்.

ஒட்டு மொத்தமாக 61 000 படையினர் மீட்புப் பணிக்காக அனுப்பப்பட்டு அவர்களில் 10 000 பேர் விலக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## இரத்ததானம் சுலபமானது

- இரத்ததான விண்ணப்பப் படிவம் பூர்த்திசெய்தல் 5.10 நிமிடம்
- பதிவு செய்தல் : 5-10 நிமிடம்
- வைத்திய பரிசோதனை : 10-15 நிமிடம்
- குருதி வழங்கல் : 10 - 15 நிமிடம்
- ஓய்வும் நீராகாரம்·அருந்தலும் : 10 நிமிடம்
- விசேட உணவு உட்கொள்ளவேண்டிய அவசியமில்லை
- மறுநாளில் இருந்து நாளாந்த வேலைகளில் ஈடுபடலாம்

இரத்த வங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# ஆப்கான் தேர்தலில் வாக்களித்தால் சடலமாகவே மீட்கப்படுவீர்கள்!
## மக்களுக்குத் தலிபான் எச்சரிக்கை

காபூல் —

இன்று நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணியுங்கள். மீறி வாக்களிக்கச் சென்றால் பிணமாகிவிடுவீர்கள் என்று ஆப்கானிஸ்தான் மக்களுக்குத் தலிபான் கிளர்ச்சிவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் ஆட்சிபீடத்தில் இருந்த தலிபான்கள் கடந்த 2001 ஆம் ஆண்டு அமெரிக்க இராணுவ நடவடிக்கை மூலம் அகற்றப்பட்டனர். தற்போது அங்கு ஜனநாயக ஆட்சி மலர ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர் நடவடிக்கையாக ஆப்கானிஸ்தானில் இன்று தேர்தல் நடைபெறுகிறது. வாக்குப் பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தீவிரமாக நடந்து முடிந்துள்ளன. பாதுகாப்புக்காக அமெரிக்க வீரர்கள் 32 000 பேர் உட்பட சுமார் 1 லட்சம் இராணுவத்தினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தேர்தல் நடைபெறுவதற்கு தலிபான் தீவிரவாதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். தேர்தலில் போட்டியிட்ட பல வேட்பாளர்களைக் கடத்திச் சென்று சுட்டுக் கொன்றனர். கடந்த வியாழக்கிழமை நூரிஸ்தான் என்ற இடத்தில் பிரசாரக் கூட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் பெண் வேட்பாளர் படுகாயமடைந்தார்.

இந்த நிலையில் தேர்தலைப் புறக்கணிக்கும்படி ஆப்கான் மக்களுக்கு தலிபான் கிளர்ச்சிவாதிகள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து தலிபான் செய்தித் தொடர்பாளர் அப்துல் லத்தீப் ஹகீமி கூறியதாவது -

ஆப்கான் மக்கள் மீது தேர்தலை அமெரிக்கா திணிக்கிறது. இது அவர்களின் சூழ்ச்சித் திட்டமாகும். ஆகவே, ஆப்கான் மக்கள் இந்தத் தேர்தலைப் புறக்கணிக்கவேண்டும்.

தேர்தல் தினத்தன்று அமெரிக்கப் படைகளுக்கு எதிராகக் குண்டுவெடிப்புத் தாக்குதல் நடத்துவோம். அதில் அப்பாவிகளும் உயிரிழக்க நேரிடலாம். நாங்கள் ஆப்கான் மக்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தமாட்டோம்.

எங்கள் எச்சரிக்கையை மீறி வாக்களிக்கச் சென்றால் நீங்களும் பிணமாகிவிடுவீர்கள். அதற்கு நாங்கள் பொறுப்பில்லை. நீங்களே பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# காஸாவில் மதவழிபாட்டுக் கூட்டத்தை ஹமாஸ் அமைப்பு நடத்தியுள்ளது!



காஸா —

காஸாப் பகுதியிலிருந்து யூதக் குடியேற்றவாசிகள் வெளியேறிய பின்னர் ஹமாஸ் அமைப்பு முதன் முறையாக கடந்த வெள்ளிக்கிழமை அங்கு மத வழிபாட்டுக் கூட்டமொன்றை நடத்தியுள்ளது.

இந்த மத வழிபாட்டுக் கூட்டத்தில ஆயிரக்கணக்கான ஹமாஸ் அமைப்பின் ஆதரவாளர்கள் பங்குபற்றியிருந்தனர். தமது நிர்ப்பந்தம் காரணமாகவே காஸாவிலிருந்து இஸ்ரேல் வெளியேறியதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எகிப்திய மற்றும் பலஸ்தீனப் படையினர் காஸா பகுதிக்குள் செல்வதையிட்டு தமது வரவேற்பை நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்கள் தெரிவித்துள்ளனர். இந்த வரவேற்பு நிகழ்வில் பங்குகொண்ட பெருமளவான மக்களைக் கட்டுப்படுத்த எகிப்திய மற்றும் பலஸ்தீன பொலிஸார் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தனர்.

ரபா அகதி முகாமிலுள்ள பெருமளவு பலஸ்தீனர்கள், காஸாப் பகுதிக்குள் செல்வதைத் தடுப்பதில் பலஸ்தீன மற்றும் எகிப்தியப் படையினர் தோல்வியைச் சந்தித்துள்ளனர். இந்தத் தோல்வி, இஸ்ரேலுடன் எகிப்து செய்த உடன்படிக்கையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே தமது போராட்டம், ஆக்கிரமிப்பாளர் பலஸ்தீன மண்ணிலிருந்து அகலும்வரை தொடருமென ஹமாஸ் அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் நிசார் றயான் ஏ.பி.செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

# கலிபோர்னிய ஆளுநர் சுவாஸ்னேகரின் சீர்திருத்த நடவடிக்கைகளில் அதிருப்தி!




வொஷிங்ரன் —

அமெரிக்காவின் பிரபல நடிகர் ஆர்னோல்ட் சுவாஸ்னேகர் 2 ஆண்டு களுக்கு முன்பு கலிபோர்னிய மாகாண ஆளுநர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். ஆளும் குடியரசுக் கட்சி சார்பில் வெற்றிபெற்ற அவர், மாநிலத்தில் - அரசாங்க நிர்வாகத்தில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார்.

திறமையற்ற ஆசிரியர்கள், தீயணைப்புப் படை வீரர்கள்,பொலிஸார், தாதிகள் போன்ற ஊழியர்களைப் பதவிநீக்கும் சட்டங்களும் கொண்டு வந்தார். இவரது இந்த நடவடிக்கைகள் தொழிற்சங்கத்தினருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் கலிபோர்னிய ஆளுநர் பதவிக்கு அடுத்த வருடம் தேர்தல் நடைபெறவுள்ளது. ஆர்னோல்ட் மீண்டும் போட்டியிட முடிவு செய்திருக்கின்றார். இதை சாண்டிகோ நகரில் நடந்த ஒரு பேரணியின்போதே அவர் தெரிவித்தார்.

2 ஆவது முறையாக நான் ஆளுநர் பதவியில் போட்டியிட விரும்புகிறேன். சீர்திருத்த நடவடிக்கைகளைத் தொடர எனக்குத் தொடர்ந்து ஆதரவு தரும்படி கேட்டுக்கொள்கின்றேன். அமெரிக்காவின் தலைசிறந்த மாகாணமாக கலிபோர்னியாவை உருவாக்குவதே எனது லட்சியம் என அவர் தெரிவித்தார்.

அடுத்த வருடம் நவம்பர் மாதம் கலிபோர்னிய ஆளுநர் தேர்தல் நடைபெறவுள்ளது. ஆர்னோல்டை எதிர்த்து, நடிகர் வாரன் பீட்டி அல்லது இயக்குநர் ரொப் ரெய்னர் ஆகியோர்களில் ஒருவரை நிறுத்த ஜனநாயகக் கட்சி ஆலோசித்து வருகிறது.

# லெபனானில் கார்க் குண்டுவெடிப்பு ஒருவர் பலி; 22 பேர் படுகாயம்!

பெய்ரூட் —

லெபனானின் கிழக்குப் பகுதி நகரொன்றில் இடம்பெற்ற சக்திவாய்ந்த இரண்டு கார்க்குண்டு வெடிப்புக்களில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் 22 பேர் படுகாயமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

தாக்குதல் நடத்தப்பட்ட இடம் பெருமளவு கிறிஸ்தவர்கள் வாழும் பகுதியெனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலில் தேனீர்கடை உரிமையாளர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், இந்தக் கடையின் வாடிக்கையாளர்களில் பெருமளவானோர் காயமடைந்ததாகவும் லெபனான் ஒளிபரப்புச் சேவை தெரிவித்தது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து அப்பகுதியைத் தடைசெய்துள்ள படையினர் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்றனர்.

இந்தத் தாக்கு தலைசிரியாவே நடத்தி யுள்ளதென லெபனானி லுள்ள சிரிய எதிர்ப்பா ளர்கள் தெரிவித்தனர். லெபனானில் நடை பெற்றுவரும் குற்றச் செயல்களின் தொடர்ச்சியாகவே இந்தச் சம்பவமும் இடம்பெற்றுள்ளதாக லெபனான் நாடாளு மன்ற உறுப்பினர் அற்றப் மஜ்டா லானி ஏ.பி. செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.



லெபனானிலிருந்து சிரிய படைகள் வெளியேறிய பின்னர் அங்கு குண்டு வெடிப்புகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றமை·குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, கடந்த பெப்ரவரி 14 ஆம் திகதி லெபனான் முன்னாள் பிரதமர் கரீரி குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டமை தொடர்பாக ஐ.நா.வின் விசாரணையாளர்கள் சிரியாவிற்குச் சென்று உள்ளூர் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வவுனியாவில் கொல்லப்பட்டவர் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்

வவுனியா—

வவுனியா - தேக்கவத்தைச் சந்தியில் நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்ட வரதர் அணியைச் சேர்ந்த நகுலன் எனப்படும் ரத்தினம் சிவலோகநாதன், வலி-கிழக்குப் பிரதேச சபை உறுப்பினராக இருந்தவர் எனத் தெரியவருகிறது.

ஏ 9 வீதியில் வவுனியா மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இரவு 9.20 மணிக்கு நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றிலேயே இவர் உயிரிழந்தார்.

9 மி.மீ துப்பாக்கியால் 9 தடவைகள் சுடப்பட்டு உயிரிழந்த இவர் 1998 காலப்பகுதியில் வலி - கிழக்கு பிரதேச சபை உறுப்பினராக ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் அங்கம் வகித்தவராவார்.

# பொலிஸ்மா அதிபருக்கு ஒருவருட சேவை நீடிப்பு!

பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவுக்கு ஒருவருட சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அடுத்தமாதம் 10ஆம் திகதியுடன் 60 வயதைப் பூர்த்தி செய்யும் இவர் - சேவையில் இருந்து ஓய்வுபெறவேண்டிய நிலையில் உள்ளபோதும் - 2006 ஒக்ரோபர் 14ஆம் திகதி வரை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருக்கும் வகையில் சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகாவின் விசேட பணிப்பின் பேரிலேயே இந்த சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் - இவருக்கான சேவை நீடிப்புக் கடிதம் நேற்றுமுன்தினம் மாலை கையளிக்கப்பட்டதாகவும் பொலிஸ் தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# இரு பொலிஸார் சுட்டுக்கொலை!

இரத்தினபுரி—

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள நிவித்திகல என்ற இடத்தில் கொள்ளை முயற்சி ஒன்றைத் தடுக்கமுயன்ற இரண்டு பொலிஸார் நேற்றிரவு சுட்டுக்கொல்லப்பட்டனர்.

வீடொன்றில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டிருந்த குழுவொன்றை நேற்றிரவு 8.30 மணியளவில் பொலிஸார் கைதுசெய்ய முயன்றபோது கொள்ளையர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த சப் இன்ஸ்பெக்டர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

# சர்வதேச சமூகத்தை...

குமாரதுங்க வெளிநாடுகளில் பேசுகின்ற பேச்சிற்கும் இலங்கையில் பேசுகின்ற பேச்சுக்களுக்கும் இடையே ஏராளமான முரண்பாடுகள் உள்ளன.

சந்திரிகாவின் அறிக்கைகளை தமிழ்மக்கள் நம்பியதாக வரலாறு இல்லை. இதனை சர்வதேச நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும்.

சந்திரிகாவின் பதவிக்காலம் முடிவடைய இன்னும் சில மாதங்களே உள்ளன. இந்த நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி முறையை ஏற்படுத்தப்போவதாக அவர் கூறியிருப்பது வேடிக்கையானது. சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் போலித்தனமான உரையாகத்தான் நாங்கள் இதனைப் பார்க்கிறோம்.

முன்னைய ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் இடைக்கால நிர்வாகசபை குறித்த பேச்சுக்குக் கூட சந்திரிகா தடை விதித்தார். அந்த அரசாங்கத்தை பதவி கவிழ்த்தார். தன்னுடைய நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழ்மக்களுக்கான மனிதாபிமானப் பிரச்சினைகளை தீர்ப்பதற்குக்கூட அவர் முன்வரவில்லை.

நாம் ஏற்கனவே சந்திரிகாவின் முரண்பாடான பேச்சுக்கள் குறித்து நோர்வேக்கு எடுத்துக்கூறியுள்ளோம். சந்திரிகாவின் போலித்தனமான பேச்சுக்களும் முரண்பாடான கருத்துக்களும் சமாதான முயற்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதாகச் சுட்டிக் காட்டி வருகின்றோம்.

சந்திரிகாவின் பேச்சும் செயலும் வெவ்வேறானவை என்று நோர்வே அறிந்து வைத்துள்ளது. சமீபத்தில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் வந்தபோது அவருக்கு அளித்த வாக்குறுதி ஒன்றை மறுநாளே மாற்றியிருந்தார் சந்திரிகா. அதனை நோர்வே தெரிந்து வைத்துள்ளது.

சர்வதேச அழுத்தம் காரணமாகவே ஜனாதிபதி சுனாமி பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் விடுதலைப் புலிகளுடன் கைச்சாத்திட்டார். ஆனால் அவர் இந்த கட்டமைப்பை நடைமுறைப் படுத்துவதற்கான எந்த ஒரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. ஆனால் சுனாமி பொதுக் கட்டமைப்பு அமுல்படுத்தப்படாமைக்கு உயர் நீதிமன்ற தீர்ப்பும் சிங்கள தீவிரவாத சக்திகளுமென காரணம் காட்டுகின்றார்.

தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன என தென்பகுதி அரசியல்வாதிகளும், இராஜதந்திரிகளும் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் தெரிவித்து ஏமாற்றும் வித்தையைக் கையாண்டு வருகின்றனர். அத்துடன் விடுதலைப்புலிகள் பலநாடுகளுடன் தமது உறவினை கட்டியெழுப்பி வரும் இவ்வேளையில் தென்பகுதி அரசியல்வாதிகளும், இராஜதந்திரிகளும் அதனை குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

போர்நிறுத்த உடன்படிக்கையை அமுல் செய்வதற்கு இலங்கைக்கு வெளியே பேச்சு நடத்துவதற்கு உடனடியாகவே விடுதலைப்புலிகள் தயாராக உள்ளனர்.

எதிர்கால பேச்சுக்கள் வெளிநாட்டில் அல்லாது இலங்கையிலேயே நடத்தப்படவேண்டுமென இலங்கை அரசு வற்புறுத்துவது விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்துடன் நல்லுறவைப் பேணி விடுவார்கள் என்பதனாலேயேயாகும்.

சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கை அரசு தீவிர கவனம் செலுத்துமேயானால், போர்நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பான பேச்சை நடுநிலையான நாடொன்றில் நடத்த முன்வரவேண்டும். போர்நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தை நடுநிலையான நாடொன்றிலேயே நடத்தப்பட வேண்டுமென நாம் நோர்வேக்கு ஆணித்தரமாக தெரிவித்துள்ளோம்.

ஆனால், இலங்கை அரசின் அழுத்தம் ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவு காரணமாக இலங்கைக்குள் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டுமென நோர்வே முன்மொழிவை முன்வைத்தது.

எனினும் இந்த முன்மொழிவை நோர்வே எம்மீது அழுத்தவில்லை. எமது முன்மொழிவு குறித்து நோர்வே தற்போது கவனத்திலெடுத்து வருவதாக நாம் அறிகின்றோம். லக்ஷ்மன் கதிர்காமர் கொலையை விடுதலைப் புலிகள் செய்யவில்லை. எவரையும் கொலை செய்வதால் விடுதலைப் புலிகளுக்கு எந்தப் பயனும் ஏற்பட்டுவிடாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# ஓட்டோ சாரதி சுட்டுக்கொலை!

கொழும்பு—

அனுராதபுரம் பழைய பஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் ஓட்டோ சாரதியொருவர் உயிரிழந்தார். ஓட்டோ ஒன்றில் வந்தவர்களே துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றனர். இதில் சமந்த நயனபிரிய (வயது 36) என்ற ஓட்டோ சாரதியே கொல்லப்பட்டார்.

பிஸ்டல் ஒன்றினாலேயே இவர் சுடப்பட்டதாகவும் சந்தேக நபரை விரைவில் கைது செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அனுராபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜயலத் பலகல்ல தெரிவித்தார்.

## தமிழீழ...

துணைப்படை வீரர்களுக்கான சிறப்புப் பரிசில்களை கேணல் சூசை வழங்கினார். இதேவேளை, நான்காவது அணி பயிற்சிகள் இன்று தொடங்கவுள்ளன.

## தமது..

வழங்கிய பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

அண்மையில் நோர்வே நாட்டில் சர்வதேச தீவிரவாதம் பற்றி நான் நிகழ்த்திய உரையின் தலைப்பு 'ஏன் தீவிரவாதம்' என் பதுதான்.

தீவிரவாதத்தில் இரண்டு வகையுள்ளது. ஒன்று மக்கள் தீவிரவாதம், இரண்டாவது ஜனநாயக தீவிரவாதம்.

மக்கள் தீவிரவாதம் என்பது மத அடிப்படையில் பொதுமக்களுக்குள் மூட்டி விடப்படுகிற தீ.

ஜனநாயக தீவரவாதம் என்பது சிறுபான்மையினரை மதிக்காமல், அவர்களின் சம்மதம் பெறாமல் பெரும்பான்மையினர் எடுக்கும் சில முடிவுகளினால் விளைகிற தீவிரவாதம். இதுதான் இலங்கையில் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிற உயிர் பலிகளுக்குக் காரணம்.

முதலில் தமிழர்கள் ஜனநாயக முறையில் குரல் கொடுத்தார்கள். ஆட்சியாளர்களின் காதுகளில் இந்தக் குரல்கள் விழவில்லை. ஆகவே, அடுத்த தலைமுறையினர் ஆயுதங்களைக் கையில் எடுத்து, தங்கள் வாழ்வுரிமையைக் காத்துக்கொள்ள போராடுகிறார்கள். அதற்குத் தீர்வு கண்டால்தான் அங்கே அமைதி திரும்பும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கொழும்பில்...

தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவித்தன.

மகாகுமாரதுங்க மாவத்தையில் உள்ள படையினர் மற்றும் பொலிஸாரின் வீதித்தடையில் சோதனையிட்டபோது மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து 9 மி.மீ பிறவுனிங் பிஸ்டல் - 1, 9 மி.மீ ரவைகள் -10, தலா 20 கிராம் கொண்ட 30 பக்கற் போதைப் பொருட்கள், 2 மொபைல் போன்கள், 19 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றுடன் இரு இளைஞர்களைக் கைதுசெய்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை 3 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது கைதுசெய்யப்பட்ட இருவரும் கிரான்ட்பாஸ் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதேவேளை - போலியகொட, மருதானை ஆகிய இடங்களில் படையினரும் பொலிஸாரும் நேற்றுமுன்தினம் இரவு தேடுதல்களை நடத்தியபோது 4 தமிழ் இளைஞர்களைச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர்.

அத்துடன், விமானப்படைத் தலைமையகத்துக்கு அருகே சந்தேகத்துக்கிடமாக நடமாடியதாக மேலும் ஒரு இளைஞரை படையினர் கைதுசெய்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 9.50 மணியளவில் றியோ தியேட்டர் அருகில் சந்தேகத்துக்கிடமாக நடமாடியபோதே மேற்படி இளைஞரை படையினர் கைதுசெய்தனர்.

இந்தப் பகுதியில் நடமாடியதற்குப் போதிய காரணங்களை காட்டாத இவர் கொம்பனித்தெரு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777 222422
அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
30-09-2005க்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.
80% OFF
Batch I - 18/09/2005
Batch II - 23/09/2005
Batch III - 25/09/2005
Batch IV - 02/10/2005

# அனுராவுக்கு விளக்கமளிக்க ஜயரட்ண தலைமையில் குழு!

கொழும்பு—

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்வதற்காக நடத்தப்படும் செயற்திட்டங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவிற்கு விளக்கமளிக்க கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் தயாராகி வருவதாக கூறப்படுகிறது.

சுதந்திரக்கட்சியின் இந்தக் குழுவிற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும், தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சருமான டி.எம்.ஜயரட்ண தலைமை தாங்கவுள்ளார்.

தற்போது வெளிநாடு சென்றுள்ள அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க நாடு திரும்பியதும் அவரைச் சந்தித்து விபரங்களை எடுத்துக் கூறவுள்ளதாக அமைச்சர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்தார். (தே)

# லக்ஷ்மன் கதிர்காமரின் இடத்துக்கு புதிய உறுப்பினர் ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கை!

கொழும்பு—

லக்ஷ்மன் கதிர்காமர் கொலையை அடுத்து வெற்றிடமாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வேறொருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் பிரியாணி விஜேசேகர - தேர்தல் ஆணையாளரிடம் கேட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியலில் இருந்தே ஒருவரைத் தெரிவுசெய்யுமாறு அவர் கோரியுள்ளார்.

இது தொடர்பான கடிதம் தேர்தல் ஆணையாளருக்குக் கிடைத்திருப்பதாகவும், இன்னும் இரண்டு வாரங்களுக்குள் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தே)

# ஐ.தே.க விசேட கூட்டம் இன்று நகரசபை மைதானத்தில்

கொழும்பு—

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட பிரதிநிதிகளுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டின் அனைத்து தேர்தல் தொகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் - இந்தக் கூட்டத்தில் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் - அரசாங்கத்தின் கொள்கைகளைக் கண்டிப்பது, மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது உள்ளிட்ட மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலுக்கு முகம்கொடுப்பது எவ்வாறு என்பது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் கட்சிப் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கப்படவிருப்பதாகவும் செய்திகள் தெரிவித்தன.

## அமைச்சர்கள்...

பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

## நோர்வேயின்...

அரசு விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சமாதான முயற்சிகளில் அனுசரணையாளராக பங்கேற்று போர்நிறுத்த உடன்பாட்டையும், சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டையும் ஏற்படுத்தியதற்கு ஜனாதிபதி சந்திரிகா நோர்வே பிரதமரிடம் நன்றி தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதி சந்திரிகாவிடம், நோர்வே பிரதமரும் - போர்நிறுத்த உடன்பாட்டை வலுப்படுத்துவது தொடர்பாகவும் இதற்கு உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டிய விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராய்ந்தனர்.

மேலும், போர் நிறுத்த உடன்பாட்டை வலுப்படுத்துவது தொடர்பாக ஆராய விசேட பிரதிநிதியாக புறூவ் ஹொவ்டேயைநோர்வே அரசு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதற்கும் ஜனாதிபதி சந்திரிகா நன்றி தெரிவித்தார்.

## திருமலையில்...

பொலிஸார் மக்களுக்கு நிலைமையைத் தெளிவுபடுத்திய பின்னர் மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை - சுனாமி அனர்த்தம் ஏற்படுவதற்கான எவ்வித அறிகுறியும் இல்லையென காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

## மக்களை...

திருமதி சாந்தசீலன், வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் தி.நடராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிறேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா, பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் பிரபா, கிராம அலுவலர்கள், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பொங்குதமிழ் நிகழ்வுக்காக பொதுமக்களை அணிதிரட்டும் பணியில் அனைத்துக் கிராமிய பொது அமைப்புக்கள் இணைந்து செயற்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

குருதிக்கொடையாளர் கௌரவிப்பு விழா
2005 செப்ரெம்பர் 21
குருதி கொடையாளர்கள் உயிர்காக்கும் உத்தமர்கள்.
இடம் : வீரசிங்கம் மண்டபம் நேரம் : காலை 9.00 மணி

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கான
அவசர கலந்துரையாடல்
நிரந்தர நியமனத்தில் தவறவிடப்பட்ட பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களின் சரியான விபரங்கள் திரட்டப்படவுள்ளதாலும், சில முடிவுகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாலும் அனைத்துப் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களும் தவறாது சமுகம் தரவும். தவறும் பட்சத்தில் நாம் பொறுப்பாளிகள் அல்லர்.
இடம்: யாழ். கல்வி வலய பணிமனை முன்றலில்
காலம்: 18.09.2005 ஞாயிற்றுக்கிழமை (இன்று)
காலை 10.00 மணிக்கு.
இணைப்பாளர்,
பாதிக்கப்பட்ட பட்டதாரி
பயிலுநர் ஆசிரியர்கள்.
(2062)

இப்பத்திரிகை இல.267 ,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.